வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 12.05.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 133 | பக்கங்கள் : 16


07 பயப்படுகிறீர்களா மோடியைக் கேட்கிறார் ராகுல்


08 பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமை கண்டறியப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்


09 கூடிக் கலைவதில் பயனில்லை!



11 தமிழ்ப் பொது வேட்பாளர்: ஐயங்கள், திரிபுகள், நிஜங்கள்!

# பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேரா?

கொழும்பு, மே 12

**சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்கு தயாராக இருக்கும்படி தம்மிக பெரேராவுக்கு அந்தக் கட்சியின் அதியுச்ச அதிகாரம் படைத்தவர்கள் தெரிவித்துள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.**

அத்துடன், அவர் உட்பட மேலும் சிலருடன் பெரமுன கட்சியின் உயர் தலைமைகள் பேச்சு நடத்தத் தயாராகி வருகின்றன. இந்தப் பேச்சு அடுத்த வாரமளவில் நடைபெறும் என்றும் தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப். 17 முதல் ஒக். 16 வரையான காலப் பகுதிக்குள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து பிரதான கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் கவனம் செலுத்தி வருகின்றன. பொதுஜன பெரமுன கட்சி அறிவிப்பு வெளியான மறுநாளே தனது அதிநவீன தேர்தல் பிரசார செயலகத்தை திறந்து வைத்தது.

அங்கு நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ, ஜூன் 18ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை அறிவிப்பார். ஜூன் 16ஆம் திகதி பொதுஜன பெரமுன தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என்று கூறியிருந்தார். இதே நேரத்தில், அவர் ரணிலுடனான

15



## சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை நேற்று ஆரம்பம்!

வடமராட்சி, மே 12

கதிர்காமத்துக்கான பாத யாத்திரை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து நேற்று சனிக்கிழமை காலை ஆரம்பமானது.

காலை 7.30 மணிக்கு சிறப்பு பூசை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஆலயத்தின் பிரதம பூசகர் 10இற்கும் மேற்பட்ட வேல்களை பக்தர்களின் 'அரோகரா' கோஷத்துக்கு மத்தியில் யாத்திரிகர்களிடம் வழங்கினார்.

15

### யாழ். போதனா மருத்துவமனையில்

## பிரசவித்த குழந்தையை கைவிட்டு தலைமறைவானார் 15 வயது சிறுமி

யாழ்ப்பாணம், மே 12

குழந்தையை பிரசவித்த 15 சிறுமி மருத்துவமனையிலேயே, அந்தக் குழந்தையை கைவிட்டுச் சென்ற சம்பவம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி - துன்னாலையை சேர்ந்த சிறுமியே இவ்வாறு குழந்தையை கைவிட்டு சென்றார் என்று மருத்துவமனை பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தனது தாயாருடன் வந்த சிறுமி பிரசவத்துக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்று முன்தினம் இரவு அவருக்கு குழந்தை

15

## நான் தூதுவரானால் இலங்கையை பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்குவேன்!

### அமெரிக்காவின் எலிசபெத்

வாஷிங்டன், மே 12

நான் தூதுவராக நியமிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டால் இலங்கை பின்பற்ற வேண்டிய சர்வதேச தராதரத்துக்கு அனைவரையும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவேன் - இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படும் எலிசபெத் கேகோர்ஸ்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட்டின் வெளிவிவகார குழு முன்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, "நான் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக

15

## புத்தரின் போதனைகளை ஆராய ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு


கொழும்பு, மே 12

புத்தரின் போதனைகளுக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஆராய்ச்சி பணிகளுக்கு அடுத்த வருடம் ஒரு பில்லியன் (100 கோடி) ரூபாய் ஒதுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புத்தரின் போதனைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆராய்ச்சி பணிகளை இந்த வருடத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்த போதிலும் செயற்கை நுண்ணறிவை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான சட்டங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படாததால், அடுத்த வருடம் வரை அந்தப் பணிகளை ஒத்திவைக்க வேண்டியுள்ளதாகவும் புதிய சட்டங்களை நிறைவேற்றிய பிறகு அடுத்தகட்ட பணிகள் செயல்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு - மொறட்டுவை பௌத்த மன்ற

15



## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் அடையாள உணவான 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கப்பட்டது.

இறுதிப் போர் காலகட்டத்தில் உப்பு

15

## ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக சகல கட்சிகளும் இணைந்து சதி!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

நிந்தவூர், மே 12

நாட்டிலுள்ள பிரதான கட்சிகள் பலவும் இன்று ஐக்கிய மக்கள் சக்தியைக் கண்டு அஞ்சுகின்றன. எனவே, அவை அனைத்தும் ஒன்றிணைந்து சதித்திட்டம் தீட்டுகின்றன. ஆனால், எந்தவொரு

15

## ரூ. 2000 உயர்ந்தது தங்கம்!

கொழும்பு, மே 12

தங்கத்தின் விலை பவுணுக்கு 2 ஆயிரம் ரூபாயால் உயர்ந்தது. அட்ஷய திருதியை ஒட்டியே நாட்டில் தங் கத்தின் விலை அதிகரித்துள்ளதாக சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, நேற்று காலை கொழும்பு செட்டியார் தெரு தங்க விற்பனை நிலையங்களில்

15

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விசுவமடு, புதுக்குடியிருப்பில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்!

முல்லைத்தீவு, மே 12

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் நினைவாக நேற்றைய தினம் முல்லைத்தீவின் விசுவமடு, புதுக்குடியிருப்பு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

விசுவமடு ரெட்பானா சந்தியில் சமூக செயல்பாட்டாளர்களின் ஏற்பாட்டிலும், புதுக்குடியிருப்பு சந்தியை அண்மித்த பகுதியில் மாற்றத்துக்கான இளையோர் அமைப்பின் ஏற்பாட்டிலும் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயல்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (ஐ)

### 36 மணித்தியாலங்களுக்குள்

# மனிதக் கடத்தல் தொடர்பில் 77 தொலைபேசி அழைப்புகள்

கொழும்பு, மே 12

**ரஷ்யா - உக்ரைன் யுத்தத்துக்காக இலங்கைச் சேர்ந்தவர்களைச் சட்டவிரோதமாக ஈடுபடுத்திய மனிதக் கடத்தல் தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட விசேட பிரிவுக்கு 77 தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

இலங்கை முப்படைகளைச் சேர்ந்த ஓய்வுபெற்ற படையினர் மற்றும் படைகளை விட்டு சட்ட விரோதமாக விலகியவர்களை இவ்வாறு மனிதக் கடத்தல் கும்பல் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரில் ஈடுபடுத்தியதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு முதல் குறித்த விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன் 36 மணித்தியாலங்களுக்குள் இவ்வாறான தொலைபேசி அழைப்புகள் கிடைத்தமை விசேட அம்சமாகும் என குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போருக்குப் புறப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவத்தினர், அவர்கள் புறப்பட்ட திகதிகள், ஒருங்கிணைத்த நபர்கள், நிறுவனங்கள், தொலைபேசி எண்கள் உள்ளிட்ட தகவல்களை அளிக்க முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 0112 441146 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு வழங்க முடியும் எனவும், இதுவரை தகவல் வழங்காதவர்கள் இருப்பின் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

## 22, 23, 24ஆம் திகதிகளில் மதுபானசாலைகள் பூட்டு

கொழும்பு, மே 12

வெசாக் பண்டிகை காலத்தில் மிருகவதை, இறைச்சி விற்பனை மதுபான பாவனை போன்றவற்றுக்கு தடை விதித்து எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் மதுபான மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருட அரச வெசாக் விழாவை மாத்தளை மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு தொடர்பான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். பல்கலையில் குருதிக் கொடை!

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை குருதிக் கொடை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாம் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதில், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுடன் பொதுமக்களும் பங்கேற்று குருதிக் கொடை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வவுனியா சிறைச்சாலையில் உணவகம், சலூன் திறப்பு



வவுனியா, மே 12

வவுனியா சிறைச்சாலையில் உணவகம், சிகை அலங்கரிப்பு நிலையம் (சலூன்) என்பன திறந்துவைக்கப்பட்டதுடன், விடுதிக்கான அடிக்கல்லும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் நாட்டி வைக்கப்பட்டது.

வவுனியா ஏ -9 வீதியோரமாக சிறைச்சாலையுடன் இணைந்த வளாகத்தில் நேற்று சனிக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா சிறைச்சாலையில் நீண்டகாலமாக தண்டனை பெற்று தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை கொண்டு உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பவற்றை நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளே நடத்தவுள்ளனர். அவர்கள் சிறையில் உள்ள காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், அவர்களின் மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நிலையங்களையும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உபுல் தெனிய திறந்துவைத்தார். அத்துடன், விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் கே. ஏ. எஸ். அபயரட்ண தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உபுல் தெனிய, இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஸ் நாணயக்கார, சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பொறுப்பதிகாரி ஏ.டீ.புத்திக்க பெரேரா, பௌத்த மதகுருமார், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை நலன் பேணும் அமைப்பினர், சிறைக் கைதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## 'நவோதாவ' என பெயர் மாறியது கந்தக்காடு புனர்வாழ்வு நிலையம்!

கொழும்பு, மே 12

கந்தக்காடு புனர்வாழ்வு சிகிச்சை நிலையத்தின் பெயர் நவோதாவ சிகிச்சை நிலையம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை பரிந்துரையின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் பெயர் மாற்றம் தொடர்பில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டி. டி. யு. கே. செனவியாராச்சி நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம். எஸ். சோமரத்னவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு சிகிச்சை நிலையத்திலிருந்து போதைக்கு அடிமையானவர்கள் தப்பிச் செல்லும் பல சம்பவங்கள் அண்மைய நாட்களில் பதிவாகிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டயானாவுக்கு எதிராக தொலைக்காட்சி கூட்டுத்தாபனமும் வழக்குத் தாக்கல்!

கொழும்பு, மே 12

தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு வாய்ப்பைப் பெற்றுக் கொண்டு சுமார் பத்து இலட்சம் ரூபாயை செலுத்தத் தவறியதாகக் கூறப்படும் முன்னாள் சுற்றுலா இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகேவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய தொலைக்காட்சி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், தேசிய தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி பிரசாந் சமரசிங்க தெரிவிக்கையில்,

கமகேவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன். நிலுவைத் தொகையை வழங்குமாறு டயானா கமகேவுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களால் அவர் அதனை செலுத்தத் தவறிவிட்டார்.

நவகமுவ பெரஹராவை நேரடியாக விளம்பரப்படுத்துவதற்காகவே அவர் இந்த ஒளிபரப்பு உரிமையை பெற்றுக் கொண்டார். அதற்கான அனைத்து பணத்தையும் தனிப்பட்ட ரீதியில் செலுத்துவதாகவும் எழுத்து மூலமான ஆவணத்தை சமர்ப்பித்திருந்தார் என்றும் கூறினார்.

இராஜாங்க அமைச்சராக இருந்த டயானா கமகே உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அண்மையில் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் விசேட கடமைக்காக சிவில் உடையில் பொலிஸார்

கொழும்பு, மே 12

ரயில் சேவையில் விசேட கடமைகளுக்காகச் சுற்றுலா பொலிஸ் அதிகாரிகளைச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சேவையில் பொலிஸ் பிரிவுகளில் சிவில் உடையில் 5 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் கூறினார்.

ரயில் பயணங்களின் போது நடக்கும் குற்றச்செயல்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் எம்.பிக்கள் தொகையை 25 வீதமாக அதிகரிக்க முடியும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை



கொழும்பு, மே 12

**பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை குறைந்தபட்சம் 25 வீதமாக அதிகரிக்க முடியும். அத்துடன், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பொது இடங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நிகழும் பாலியல் வன்முறைகளுக்கு எதிர்க்கும் நிகழ்வு ஒன்று டி. பி. எடியூகேஷன் ஏற்பாட்டில் நடந்தது. இந்த நிகழ்வில் பங்கேற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

பொருளாதார நெருக்கடியின்போது பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் பெண்கள் மிகவும் அவதிப்பட்டனர். சில குடும்பங்கள் பெண்களால் வழிநடத்தப்பட்டன. அதனால் பெண்களை வலுவூட்ட எதிர்பார்க்கிறோம். இதற்காக, பெண்களை வலுவூட்டும் நோக்கில் அரசாங்கம் இரு சட்டமூலங்களை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளது. இவை எதிர்வரும் ஜூன் மாதம் சட்டமாக நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

அத்துடன், இந்த சட்டமூலங்களை நிறைவேற்றுவதன் மூலம், ஆண் - பெண் சமத்துவம், பெண்களை வலுவூட்டல் தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தல் பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுவை நிறுவுதல், பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான பொறிமுறையை ஸ்தாபித்தல் மற்றும் பெண்கள் உரிமைகள் மீறப்படுதல்களுக்கு எதிராக வழக்கு தாகல் செய்தல் என்பவற்றை செய்யமுடியும்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் நான் ஏற்கனவே பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன். பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை குறைந்தபட்சம் 25 வீதமாக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அத்துடன், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம்.

பெண்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். 2030 ஆம் ஆண்டுக்குள் பெண்கள் அரசியல் கட்சியை அங்கீகரிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். நாட்டில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும் பெண்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்கவும் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறோம் - என்றார். (ஐ)

# வீடு தேடிச்சென்று கௌரவம் அளிப்பு



நிந்தவூர், மே 12

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் கிளையினர் தமது உறுப்பினர்களான நான்கு அரச ஓய்வூதியர்களை அவர்களின் வீடு தேடிச்சென்று கௌரவித்துள்ளனர்.

நிதிய நிந்தவூர் கிளையின் 21ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் ஓர் அங்கமாக இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

தற்சமயம் நடமாடமுடியாத நிலையிலிருக்கும் - நிதியத்தின் நீண்டகால உறுப்பினர்களாகவும் - தலைவர்களாகவும் சேவையாற்றிய நால்வருக்கே கௌரவம் அளிக்கப்பட்டது.

இதன்படி, ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் நலன்புரி சங்கத் தலைவருமான எம். எச். யாகூப் ஹஸன், ஓய்வு நிலை நீதிமன்ற முதலியார் ஏ. எஸ். இப்றாகீம், ஓய்வு நிலை விரிவுரையாளர் ஏ. எல். எம். பஸீர், ஓய்வு நிலை அதிபர் கலாபூசணம், ஹாஜியானி எம். செயினுலாப்தீன் ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிந்தவூர் பிரதேச கிளை சார்பில் தலைவர் ஏ.எல். மஹ்றூப், செயலாளர் எம். ஏ. அப்துல் அஸீஸ், உப தலைவர் எஸ். அகமது உட்பட கிளை முக்கியஸ்தர்கள் நால்வரின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும் பரிசுப் பொருட்கள் வழங்கியும் கௌரவம் அளித்தனர். (ஐ-06)

# கட்சிகள் ஒன்றுபட்டு எடுக்கும் முடிவை தமிழ் மக்கள் ஏற்பர்!

## இரா. துரைரட்ணம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 11

வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து தமிழ் தலைமைகளும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வலுவான தீர்மானம் ஒன்றை எடுத்து தமிழ் மக்கள் முன் கொண்டு செல்லும்போது அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் - என்று கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ஈ. பி. ஆர். எல். எவ். பத்மநாபாமன்றத்தின் தலைவருமான இரா. துரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.

தமிழ் கட்சிகள் ஒன்றுபடாது முடிவுகள் எடுக்கப்பட்டு - அது தமிழ் மக்கள் முன்பாக கொண்டுசெல்லப்படும்போது தமிழ் மக்களை அது விரக்தி நிலைக்குத் தள்ளுவதுடன் அது தமிழ் மக்களின் எதிர்கால செயல்பாடுகளைப் பாதிக்கும்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் நலன்கள் தொடர்பில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் கூடுதல் அக்கறை செலுத்தவேண்டும் என்றும் இதன்போது அவர் வேண்டுகோள் முன்வைத்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மட்டு. - அம்பாறை மருத்துவமனைகளுக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் திடீர் பயணம்!



காரைதீவு, மே 12

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் அரச மருத்துவமனைகளுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மருத்துவமனைகளுக்கு சென்ற ஆளுநருடன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் நடராஜா சிவலிங்கம் மற்றும் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி, ஆரையம்பதி , போரதீவுப்பற்று - அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு மருத்துவமனைகளுக்கே ஆளுநர் தலைமையிலான குழுவினர் நேற்று சென்றனர்.

இதன்போது, மருத்துவமனையில் நிலவும் வளம் - ஆளணி பற்றாக்குறைகள் தொடர்பில் கேட்டறிந்த ஆளுநர் தலைமையிலான குழுவினர், சிகிச்சை பெறும் நோயாளிகளிடமும் அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் வசதிகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

அத்துடன், அங்கு நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உடனடியாக அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவு பிறப்பித்தார். (ஐ)

# வவுனியாவில் ஐஸ் போதையுடன் கைதான மூவருக்கும் மறியல்!

வவுனியா, மே 12

ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் எச்எம். ரிஸ்வி தலைமையிலான பொலிஸார் கடந்த மாதம் 28ஆம் திகதி செட்டிக்குளத்தில் வைத்து 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் 35 வயது நபரை கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து உக்கிளாங்குளத்தை சேர்ந்த 36 வயது நபர் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

இருவரிடமும் நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து மதவுவைத்த குளத்தை சேர்ந்த 28 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

மூவரையும் பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போதே மூவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

# சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்கான வட்டி வீதம் தொடர்பில் விசேட கவனம்!



கொழும்பு, மே 12

மூத்த பிரஜைகளின் சேமிப்பு வட்டி வீதங்கள் தொடர்பில் தெளிவான பகுப்பாய்வை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என்று நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்காக சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதற்கு முன்னர் வழங்கப்பட்ட ... வைப்புக்களுக்கு 10 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடனை திறைசேரியிலிருந்து செலுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடனும் உணர்வுபூர்வமாகவும் செயல்பட்டு வருகிறார். பல்வேறு வயதினருக்கான வட்டி வீதங்கள் தொடர்பாக கிடைத்த பல்வேறு கோரிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் தற்போது நிலவும் பணப்புழக்கம் தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கேற்ப தெளிவான அறிக்கையை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 500 மில்லியன் டொலர் முதலீட்டில்

# காங்கேசன்துறையில் கைத்தொழில் பேட்டை

யாழ்ப்பாணம், மே 12

**காங்கேசன்துறையிலுள்ள தனியார் கைத்தொழில் பேட்டையில் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடா வாழ் இலங்கையர் குழுவின் 500 மில்லியன் டொலர் முதலீட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**



காங்கேசன்துறைக்கு மேலதிகமாக மாங்குளம், பரந்தன், திருகோணமலை பிரதேசங்களை அண்மித்த கைத்தொழில் பேட்டைகளிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிதியமைச்சு வழங்கியுள்ள ஒரு பில்லியன் டொலர்கள் என்ற முதலீட்டு இலக்கை மூன்று மடங்குகளாக அதிகரித்து சுமார் 03 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வர முடியும் என்று முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட நாட்டின் முதலீட்டுச் சூழல் தற்போது 200% மேம்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முதலீடுகள் நாட்டுக்குள் வருவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை, நிதி ஸ்திரத்தன்மை மற்றும் நாட்டின் எதிர்காலம் பற்றிய உறுதிப்பாடு என்பன சிறப்பாக இருக்க வேண்டும். தற்போது இந்நாட்டில் ஸ்திரத்தன்மை நிலவுவதை நாட்டுக்கு வரும் முதலீடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையிலிருந்து 200 சதவீதம் மாறியுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரவில்லை. ஆனால், தற்போது முதலீட்டாளர்கள் வரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை புள்ளி விபரங்களுடன் என்னால் முன்வைக்க முடியும். மேலும் நிதியமைச்சால் வழங்கப்பட்ட இலக்குகளைத் தாண்டிச் செல்ல முடிந்துள்ளது. ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் முன்னெடுத்த வேலைத் திட்டங்களால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மட்டும் நிதியமைச்சின் இலக்கை நிறைவு செய்வது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள், நிதியமைச்சு எமக்கு வழங்கிய இலக்கை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கையுள் ளது. அதாவது இந்த வருடத்தில் 03 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை இலங்கைக்கு கொண்டுவர முடியும் என நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன்.

2023 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு திட்டங்கள் இந்த வருடத்திலேயே நடைமுறைப்படுத் தப்படுகின்றன. அந்த முதலீடுகள் இந்த ஆண்டில் சேர்க்கப்படவில்லை. மேலும், இந்த ஆண்டு முதலீட்டுச் சபை பிரதிநிதிகளை நியமித்து வெளிநாடுகளில் முதலீடுகளை ஊக்குவிக்க ஆரம்பித்துள்ளன. வெளிநாடுகளில் உள்ள இலங்கை வர்த்தகர்களை உள்ளடக்கிய புடமுடியட குழசரஅ ஊடாக முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளின் மூலம் பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெற்றிகரமான முடிவுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன.

இதற்கு மேலதிகமாக, திருகோணமலை, மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறை பிரதேசங்களை அண்மித்த கைத்தொழில் பேட்டைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் முதற்கட்டமாக காங்கேசன்துறையிலுள்ள தனியார் கைத்தொழில் பேட்டையில் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடா வாழ் இலங்கையர்களை உள்ளடக்கிய பலம்வாய்ந்த குழு ஒன்று இந்தச் செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. 500 மில்லியன் டொலர் முதலீட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக சூரிய, காற்றாலை வலுசக்தி, பசுமை ஹைட்ரஜன் ஆகிய துறைகள் நாட்டின் முக்கிய முதலீடுகளாக மாறும். இந்த நாட்டின் கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்த பிறகு இந்தியாவுடன் இணைந்து இந்த அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

பல அரசியல்வாதிகள் கூறும் வகையில் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டியது இந்தப் பாதையில் என்றால் இந்தப் பாதையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கி இருந்தால், அந்தப் பாதையில் செல்ல வேறு எவர் வேண்டும்? அவருடனேயே தொடர்ந்தும் இந்தப் பாதையில் செல்லலாம் என்றே நாம் கூறுகிறோம் என அமுனுகம மேலும் தெரிவித்தார். (எ)



## சர்வதேச நிர்மாணக் கண்காட்சியை பார்வையிட்டார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே 12

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட "வீடமைப்பு மற்றும் சர்வதேச நிர்மாணக் கண்காட்சி - 2024" ஐ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்.

'இலங்கையைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இவ்வருட கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், நிர்மாணத்துறை நிறுவனங்களின் 300 விற்பனைக் கூடங்கள் இந்தக் கண்காட்சியில் அமைக்கப்பட்டன.

மேலும், சீனாவிலுள்ள 30 முக்கிய நிறுவனங்களின் தயாரிப்புக்களுடன் கூடிய விற்பனைக் கூடங்கள் இந்தக் கண்காட்சியில் முதல் முறையாக இணைந்துள்ளதுடன் இலங்கை முப்படைகளின் நிர்மாணத் தொழில்நுட்பத்தைக் காட்சிப்படுத்தும் கூடங்களை உள்ளடக்கிய இக்கண்காட்சி இன்று 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனைக் கூடங்கள் மற்றும் ஆயுதப்படைகளின் கண்காட்சிக் கூடங்களை ஜனாதிபதி பார்வையிட்டதுடன் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்களுடன் படமும் எடுத்துக் கொண்டார். (எ)

## ஓ. எல். பரீட்சை இடைவேளையின்போது இரு பாடசாலை மாணவர்கள் மோதல்!

கொழும்பு, மே 12

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை இடைவேளையின் போது வவுனியா நகரில் இரு பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றிலேயே நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை பரீட்சையின் முதல் பகுதி நிறைவடைந்த பின்னர், இரண்டாவது பகுதி வினாத்தாள் வழங்கப்படுவதற்கு முன்னதாக விடப்பட்ட இடைவேளையின்போதே பரீட்சை மண்டபத்துக்கு வெளியே கூடிய இரு பாடசாலை மாணவர்களும் கடுமையாக மோதிக் கொண்டனர்.

வீதியால் சென்றவர்களும் பரீட்சை கடமையில் இருந்த ஆசிரியர்களின் தலையீட்டாலும் பின்னர் நிலைமை கட்டுக்குள் வந்தது. (ஐ)

## பாதாள உலக குழுவின் தலைவர் வெல்லே சாரங்கவின் சகா கைது

ஜா - எல, மே 12

டுபாயிலுள்ள பாதாள உலகக் குழுத் தலைவரும் போதைப் பொருள் கடத்தல்காரருமான வெல்லே சாரங்கவின் சகா ஒருவர் போதைப்பொருளுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் ஜா - எல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் டுபாயிலுள்ள பாதாள உலகக் குழுத் தலைவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான வெல்லே சாரங்கவின் அறிவுரையின் கீழ் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி மத்துமகல பிரதேசத்தில் நபரொருவரை சுட்டுக் கொலை செய்வதற்கு உதவி செய்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்தமை, பல்வேறு குற்றச்செயல்களுக்கு உதவி செய்தமை மற்றும் 2 கிராம் 70 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து; இளம் பெண் உயிரிழப்பு! 9 பேர் காயம்

தம்புள்ளை, மே 12



தம்புள்ளை, திகம்பதஹ பிரதேசத்தில் லொறியும் கப் வாகனமும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் 9 பேர் காயமடைந்ததாக சிகிரியா பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை, ஹிரிவட்டுன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது பெண்ணே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

ஹபரணையிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த லொறி ஒன்றும் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு மீண்டும் வீடு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கப் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது 9 பேர் காயமடைந்த நிலையில் தம்புள்ளை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மூன்று வயதுச் சிறுமி மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கப் வாகனச் சாரதியின் கவனக்குறைவே இந்த விபத்துக்குக் காரணம் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிகிரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
12.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் மக்கள்மீதான வெளியாரின் கரிசனை!

தமிழ் மக்கள் சார்ந்து தீர்க்கமான தீர்மானங்கள் தொடர்பில் சிந்திக்கும்போது - அதற்கான முயற்சிகளை முன்னெடுக்கும்போது - விமர்சனங்கள் நந்தியாகக் குறுக்கிடும். அவ்வாறான விமர்சனங்களில் முதன்மையானது - இது தொடர்பில் பிராந்திய மற்றும் சர்வதேச தரப்புகள் எவ்வாறு சிந்திக்கும்? இதனை அவர்கள் சாதகமாகப் பார்ப்பார்களா?

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் சர்வதேச அழுத்தங்கள் மட்டும்தான் தமிழரின் ஒட்டுமொத்த நம்பிக்கையாக இருந்தது. 2012இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைமீதான பொறுப்புக்கூறல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அமெரிக்க தலையீட்டினால்தான் அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பது இரகசியமானதல்ல. அப்போதிருந்த ராஜபக்ஷ அரசாங்கம் மேற்குலகத்துடன் ஒத்துழைக்க மறுத்ததால் பிரேரணைகள் தொடர்ந்தன - இப்போதும் தொடர்கின்றன.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட மனித உரிமைகள்சார்ந்த அழுத்தங்களை அமெரிக்க ஆதரவு நாடுகள் தொடர்ந்தன. அமெரிக்க ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்ட பிரேரணை தோற்கடிக்கப்படுவதை அமெரிக்கா அனுமதிக்காது. அமெரிக்கா எப்போது இலங்கைமீதான பிரேரணைக்கு ஆதரவளித்ததோ - அப்போதே அது அமெரிக்காவின் பிரச்சனை. ஆழமாக நோக்கினால் இலங்கைமீதான பிரேரணை ஈழத்தமிழர்கள் தொடர்பான பிரச்சனையுமல்ல - மாறாக, ஒட்டுமொத்த இலங்கையை கையாள்வது தொடர்பான பிரச்சனை.

ஆனால், இந்தப் பிரச்சனையின் தாற்பரியத்தை தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் புலம்பெயர் சமூகமும் ஆழமாக நோக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டமையைத் தொடர்ந்து அதுவரையில் சற்றுக் கடுமையானதுபோல் தோற்றமளித்த மேற்குலக அழுத்தங்கள் வீரியத்தை இழந்தன. அமெரிக்காவின் அழுத்தங்கள் ஒட்டுமொத்த இலங்கை தொடர்பானது என்பதை இலகுவாகப் புரிந்துகொள்வதற்கு இது போதுமானது. ஆனால், தமிழ் தரப்புகள் புரிந்துகொண்டனவா?


தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்களை தொடர்ந்து எழுந்திருக்கும் கேள்வி - இதனை கொழும்பிலுள்ள தூதரகங்கள் எவ்வாறு நோக்குகின்றன? அவர்கள் சாதகமாக நோக்குகின்றனரா அல்லது தமிழர் தரப்புகள்மீது அவர்கள் ஒருவேளை அதிருப்தியடைந்து விட்டால் என்ன செய்வது? இவ்வாறான கேள்விகள் அனைத்துக்கும் ஒரேயொரு பதில்தான் உண்டு. அதாவது, அவர்கள் எதையும் நினைக்கட்டும் - அது பற்றி தமிழர் தரப்புகள் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தமிழர்கள்தாம் இயங்கியாக வேண்டும்.

தமிழில் சொல்வார்கள் - அழுகின்ற பிள்ளைதான் பால் குடிக்கும் என்பதுபோல், தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. அதற்கான உச்சபட்சமான தீர்வு தேவை - இராணுவ வெற்றியைக் கொண்டு, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையை மறுதலிக்கும் முயற்சியை எந்த வகையிலும் நாம் அனுமதிக்க முடியாது - என்பதை தமிழ் மக்களுக்காக வேறு எவர் கூறுவார்? தூதரகங்கள் கூறுமா?

இராஜதந்திர சமூகத்தை தமிழ் மக்கள் வெறுக்கவில்லை - அவர்களின் ஆதரவு எப்போதும் தமிழ் மக்களுக்கு தேவை. ஆனால், அவர்களின் தலையீடுகள் குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டவை. அவர்கள் விடயங்களை முழு இலங்கைக்குமானதாகவே நோக்குகின்றனர். அவர்களால் அப்படித்தான் நோக்கவும் முடியும். பாதிக்கப்பட்ட மக்கள்தான் தொடர்ந்தும் அவர்களின் குரலை முன்னிறுத்திக் கொண்டிருக்க வேண்டும். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்னை அப்படியே இருக்கின்றது என்பதை சொல்லவும்கூட தமிழ் மக்களுக்கான ஜனநாயக ரீதியான போராட்ட வடிவமாகும். இதனைத் தூதரங்கள் தவறாக நோக்க முடியாது - அவ்வாறு நோக்கினால் அது நியாயமானதாகவும் இருக்காது. ஈழநாடு ஆசிரியர் பீடத்துக்கு உள்ள இராஜதந்திர அனுபவத்தின் அடிப்படையில் கூறுவதனால் அவர்கள் ஒருபோதும் அவ்வாறு நோக்கமாட்டார்கள். அவர்கள் மேலும் தமிழ் மக்களை நெருங்கி வருவார்கள் - பிரச்னையை மேலும் புரிந்து கொள்ள முயற்சிப்பார்கள்.

# இலங்கை - அமெரிக்கா இடையே உறவுகளை வலுப்படுத்த திட்டம்

### நாமல் எம். பி. - அமெரிக்க தூதுவர் சந்திப்பு



கொழும்பு, மே 12

இலங்கை - அமெரிக்காவுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தல் தொடர்பில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவுடன் அமெரிக்கத் தூதுவர் விசேட சந்திப்பில் ஈடுபட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்

நாமல் ராஜபக்ஷவுடனான சந்திப்பையடுத்து அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையில் அரசியல் கட்சிகளுக்கிடையிலான எமது சந்திப்பின் ஒரு பகுதியாக நாமல் ராஜபக்ஷவை சந்தித்தோம்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் என்ற புதிய பொறுப்பில் அவரது அரசியல் ஈடுபாடுகள், இளைஞர்களைப் பாதிக்கும் பிரச்னைகள் மற்றும் இலங்கை - அமெரிக்காவுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தல் தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

## புதையல் தோண்டிய இருவர் கைது

ரத்கிந்த, மே 12

கிராந்துருகோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரத்கிந்த பகுதியில் புதையல் தோண்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரத்துபஸ்கெட்டிய மற்றும் பிபில ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 38 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராந்துருகோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## திருகோணமலையில் தீக்கிரையானது வீடு

நிலாவெளி, மே 12

திருகோணமலை நிலா வெளி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட இலக்கம் 38 இல் உள்ள, பெரியகுளம் விருகம்மான வீட்டுத் தொகுதியில் வீடொன்று தீப்பற்றியுள்ள தாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை அதி காலை 12. 30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.



இதில் பல பெறுமதியான வீட்டு உபகரணங்கள் எறிந்து நாசமாகியுள்ளதால் பல இலட் சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வீட் டின் உரிமையாளர் தெரிவித்தார்.

வீடு தீப்பற்றிய மைக்கான காரணம் இது வரைக்கும் வெளியாகவில்லை. இச்சம்பவம் தொடர்பில் நிலாவெளி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். (எ)

## மின்னல் தாக்கி ஒருவர் காயம்!


யாழ்ப்பாணம், மே 12

உடுவில் பகுதியில் மின்னல் தாக்கத்தால் ஒருவர் காயமடைந்தார். அத்துடன், தென்னை மரம் ஒன்று தீப்பற்றி எரிந்தது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக கடும் வெப்பமான காலநிலை நிலவியது. இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு உடுவிலில் கடும் மின்னல் தாக்கத்துடன் மழை பெய்தது.

இதன்போது, வீடு ஒன்றிலிருந்த தென்னை மரத்தை மின்னல் தாக்கியதால் அது தீப்பற்றி எரிந்தது. அந்தச் சமயம் அந்த வளவிலிருந்த வீட்டில் இருந்த ஒருவர் காயமடைந்தார். காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்லும் இந்தப் பாதை...?

கே.வி.கே. பெருமாள்




வேகமாக முன்னேறி வரும் அறிவியல் உலகில் ஒவ்வொரு நொடியும் எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டியுள்ளது. ஏமாற்றுக்காரர்கள் என்ன வடிவத்தில் வருகிறார்கள் என்றே புரிவதில்லை. கடந்த ஆண்டு ஜூலை மாதம் 6-ஆம் தேதி எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எதிர்முனையில் பேசியவர் ஒரு சர்வதேச கூரியர் நிறுவனத்தின் பெயரைச் சொல்லி, 'நீங்கள் தாய்லாந்துக்கு அனுப்பிய பார்சலில் போதைப்பொருள் இருக்கிறது' என்றார். 'நான் யாருக்கும் பார்சல் அனுப்பவில்லையே' என்றேன்.

'உங்கள் பெயரும், கைப்பேசி எண்ணும்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன' என்று சொல்லி விட்டு, 'இது தொடர்பாகக் காவல் துறை விசாரிக்கிறது. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்' என்று சொல்லி, இன்னொரு தொலைபேசிக்கு இணைப்புக் கொடுத்தார். அப்போது பேசிய நபர்,'இணையவழிக் குற்றங்கள் தொடர்பான காவல் நிலையத்திலிருந்து பேசுகிறேன். நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?' என்று கேட்டார். 'நான் உள்துறை அமைச்சகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிறேன்' என்று சொன்னேன். உடனே, இணைப்பைத் துண்டித்துவிட்டார்.

இதுகுறித்து, 'சைபர்' குற்றப் பிரிவில் புகார் செய்தேன். குற்றத்தைப் பதிவு செய்து கொண்ட காவலர், 'இது போன்று தினமும் நூற்றுக்கணக்கான புகார்கள் பதிவாகின்றன் பல பேர் தங்கள் மீது ஏதாவது பொய் வழக்கு வந்துவிடுமோ என்று பயந்து இந்தக் குற்றவாளிகளிடம் பணம் கொடுத்து ஏமாந்திருக்கிறார்கள். நீங்கள் உள்துறை அமைச்சகத்தின் பெயரைச் சொன்னதால், இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள் குற்றவாளிகளைப் பிடிக்க நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம்' என்று சொன்னார்.

குறிப்பிட்ட அதே கூரியர் நிறுவனத்தின் பெயரால் கடந்த ஓர் ஆண்டில் பெயரால் ஏராளமான புகார்கள் குவிந்துவிட்டதால், சமீபத்தில் அந்த நிறுவனமே தங்கள் நிறுவனத்தின் பெயரில் அழைப்புகள் வந்தால் பொதுமக்கள் கவனத்தோடு இருக்க வேண்டும் என்று பெரிய அளவில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருக்கிறது.

இன்னொரு விதமான ஏமாற்று வேலைக்கு ஓர் உதாரணம் தருகிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு என்னை அலைபேசியில் அழைத்த ஒருவர் என்னிடம் நீண்ட நாள் பழகியவர் போல, எனது பெயரைச் சொல்லி நலம் விசாரித்தார். அவரது குரல் நான் அதுவரை கேள்விப்படாத புதிய குரலாக இருந்தது. அவரது பெயரைக் கேட்டேன். சண்டிகரில் வசிக்கும் எனது நண்பர் ஒருவர் பெயரையும், மத்திய அரசில் அவர் வகித்த இரண்டு உயர் பதவிகளையும் சொல்லிவிட்டு, 'என்னை மறந்துவிட்டீர்களா?' என்று கேட்டார். 'குரல் வித்தியாசமாக இருக்கிறதே' என்றேன். 'சற்று உடல் நலம் இல்லை. எனவே, குரல் வித்தியாசமாக இருக்கிறது. உங்கள் அலைபேசியில் 'போட்டிம்' செயலியைப் பதிவிறக்கம் செய்துவிட்டு என்னை அந்தச் செயலி மூலமாக உடனே அழையுங்கள் ஒரு முக்கியமான செய்தியை உங்களோடு பகிர வேண்டும்" என்று சொல்லிவிட்டு, இணைப்பைத் துண்டித்துவிட்டார். அந்த நபர் போலியானவர் என்பதை நான் புரிந்து கொண்டேன். அந்தச் செயலி மூலம் அவர் என்ன செய்ய நினைத்திருந்தார் என்று தெரியவில்லை.

உடனே சண்டிகரில் வசிக்கும் நண்பரை அழைத்து, எனக்கு வந்த அலைபேசி அழைப்பு பற்றிச் சொன்னேன். நான் சொன்ன செய்தியைக் கேட்டு அவர் அதிர்ந்து போனார். மத்திய அரசின் தணிக்கைத் துறையில் உயர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்ற அவர் சேலம் மாவட்டத்தைச் சார்ந்தவர். தற்போது சண்டிகரில் வசித்து வருகிறார். அவரது புதல்வர் இந்திய ஆட்சிப் பணியிலும் (ஐஏஎஸ்), மருமகள் இந்திய காவல் பணியிலும் (ஐபிஎஸ்) பணியாற்றுவதால், குற்றவாளியைக் கண்டுபிடிக்க அவர்கள் முயற்சித்து வருகிறார்கள். அவரது முகநூல் பக்கத்திலிருந்து அவரது அரசுப்பணி பற்றிய தகவல்களை அந்த நபர் எடுத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இவ்வாறு, ஏமாற்றுக்காரர்கள் புதிய புதிய உத்திகளோடு களம் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது தவிர்க்க முடியாததாகிவிட்ட எண்ம முறைப் பரிமாற்றம் எவ்வளவு எளிதானதாக இருக்கிறதோ, அவ்வளவு ஆபத்தானதாகவும் இருக்கிறது. இதன் மூலம் பணத்தை இழப்போர் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருகிறது.

சமீபத்தில் பெண் வழக்கறிஞர் ஒருவருக்கு வந்த தொலைபேசி அழைப்பில், 'உங்களுக்குக் கூரியர் மூலம் ஒரு பொருள் வந்திருக்கிறது. அதில் தவறான முகவரி இருந்ததால் அதனை உங்களிடம் ஒப்படைக்கச் சென்ற நபர் திரும்பி வந்துவிட்டார். சரியான முகவரி கொடுங்கள்' என்று கேட்டு வாங்கிக் கொண்டு, 'மீண்டும் ஒரு முறை அந்த ஆளை அனுப்புவதற்கு நூறு ரூபாய் எண்மப் பரிவர்த்தனை மூலம் செலுத்த வேண்டும்' என்று சொன்னதும், நூறு ரூபாய்தானே. பரவாயில்லை என்று நினைத்து, அந்த வழக்கறிஞர் எண்மப் பரிவர்த்தனை மூலம் பணத்தைச் செலுத்தினார். அரை மணி நேரம் கழித்து அலைபேசியைத் திறந்து பார்த்தால், அவருக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவரது வங்கிக் கணக்கில் இருந்து 49,000 ரூபாய் எடுக்கப்பட்டிருப்பதாக வங்கியிலிருந்து குறுஞ்செய்தி வந்திருந்தது. உடனடியாக வங்கியைத் தொடர்பு கொண்டு, மேற்கொண்டு யாரும் பணம் எடுக்க முடியாதபடி நிறுத்தச் சொல்லி விட்டார்.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் தினசரிச் செய்திகளாகி விட்டன. வாசகர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவே மேற்கண்ட சம்பவங்களைக் குறிப்பிட்டேன்.

## இந்தவார ராசிபலன் 12.05.2024 - 18.05.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 29
நல்ல நேரம்: 7.30 - 08.30
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : பஞ்சமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். திருமண வாய்ப்புகள் தேடிவரும். பண விஷயங்களில் யாரையும் நம்பி ஏமாறாமல், மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர் பார்க்கலாம். நன்மை ஏற்படும். மாணவர்களின் படிப்பில் ஆர்வம் குறையும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வெளியூர்ப் பயணங்கள் மூலம் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. உறவினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வாக்குவன்மையால் பொருளாதார உயர்வு ஏற்படும். பூஜை வழிபாடுகள் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். சிலருக்கு தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். சிலருக்குப் பணமுடைகள் ஏற்படலாம். உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி ஆதாயங்கள் இருக்கும். பயணத்தின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் புதிய பெண்களின் நட்பு மனக்களிப்பு தரும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள். பெண்களுடன் வாக்குவாதங்களை தவிர்க்கவும். சிலருக்கு மன சஞ்சலங்கள், அலைச்சல்களும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் விஷயமான நற்செய்திகள் வரும். விற்பனைத் திறமை களைக் காட்டி இலாபத்தை அதிகரித்துக் கொள்வது உசிதம்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். குடும்ப சந் தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நீங்கள் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பார்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல் வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். மாணவர்கள் தங்கள் பொன்னான நேரத்தை முகநூல் மற்றும் இணையதளங்களைப் பார்த்து வீணடிக்காமல், கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நெருங்கிய உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். அன்பாகத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும்.


**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள், விருப்பங்கள் நிறைவேற்றுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பயப்படுகிறீர்களா?”

## பிரதமர் மோடியின் அம்பானி, அதானி குறித்த பேச்சுக்கு ராகுல் காந்தி பதில்!



நீண்ட காலமாகவே காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தொழிலதிபர்களான முகேஷ் அம்பானி, கௌதம் அதானி ஆகியோரை பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைத்து விமர்சித்து வருகிறார்.

ஆனால், அதற்கெல்லாம் பதில் பேசாமல் இருந்த மோடி, முதல் முறையாக தேர்தல் பரப்புரையின்போது அதே அம்பானி, அதானியின் பெயரைச் சொல்லி காங்கிரஸ் கட்சியை விமர்சித்துள்ளார்.

புதனன்று தெலங்கானாவின், கரீம்நகர் தொகுதியில் பரப்புரையில் ஈடுபட்டிருந்த மோடி, “தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து ராகுல் காந்தி அம்பானி மற்றும் அதானி என்ற பெயர்களை உச்சரிப்பதையே நிறுத்திவிட்டார்,” என்று கூறினார்.

ராகுல் காந்தியை குறிப்பிட்டுப் பேசிய மோடி, “தெலங்கானா நிலத்தில் நின்று நான் கேட்க விரும்புவது, இந்தத் தேர்தலில் எவ்வளவு பணம் அம்பானி மற்றும் அதானியிடம் இருந்து தனக்குக் கிடைத்துள்ளது என்பதை இளவரசர் (ராகுல்) அறிவிக்க வேண்டும். லாரி நிறைய பணம் காங்கிரசுக்கு வந்து சேர்ந்துவிட்டதா? ஒரே இரவில் இவர்களுக்குள் என்ன ஒப்பந்தம் நடந்தது? திடீரென்று அம்பானி-அதானியை விமர்சிப்பதையே நிறுத்திவிட்டார்,” என்று கூறினார்.

“கடந்த 5 ஆண்டுகளாக அம்பானி - அதானியின் பெயரைப் பயன்படுத்தி விமர்சனம் செய்துவிட்டு, திடீரென்று நிறுத்திவிட்டீர்கள் என்றால் நிச்சயம் ஏதோவொரு ஒப்பந்தம் நடந்திருக்க வேண்டும். இதற்கு கண்டிப்பாக நீங்கள் பதிலளிக்க வேண்டும்,” என்று பேசினார் மோடி.

பிரதமர் மோடியின் இந்த விமர்சனத்திற்கு ராகுல் காந்தியும் பதில் கொடுத்துள்ளார். இந்நிலையில் தற்போது இருவரின் உரைகளும் இந்தியா முழுவதும் வைரலாக பரவி வருகிறது. அப்படி அவர்கள் இருவரும் என்ன பேசினார்கள் என்பதை இந்தத் தொகுப்பில் பார்க்கலாம்.

### ராகுல் கொடுத்த பதில் என்ன?

மோடி பேசிய அதே புதன்கிழமையன்று மாலை ராகுல் காந்தியும் தனது பதிலைப் பகிர்ந்துள்ளார். அதில், “வணக்கம் மோடிஜி, கொஞ்சம் பயப்படுகிறீர்களா? வழக்கமாக அம்பானி, அதானியிடம் நீங்கள் தனி அறைகளில் தானே பேசுவீர்கள். முதல் முறையாக பொதுவெளியில் அம்பானி, அதானியின் பெயரை உச்சரித்துள்ளீர்கள். டெம்போவில் பணம் வரும் என்பதையும்கூட நீங்கள் அறிந்து வைத்துள்ளீர்கள். ஒருவேளை உங்களுக்கு சொந்த அனுபவம் உள்ளதோ?” என்று ராகுல் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், “நீங்கள் ஒன்று செய்யுங்கள். சிபிஐ மற்றும் அமலாக்கத் துறையை அவர்களிடம் அனுப்புங்கள். முடிந்தவரை வேகமாக விசாரணையை நடத்தி முடியுங்கள். பயப்படாதீர்கள் மோடிஜி. நான் மீண்டும் மீண்டும் அவர்களுக்கு நரேந்திர மோடி எவ்வளவு பணம் கொடுத்தார் என்பதைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதே பணத்தை இந்தியாவின் ஏழைகளுக்கு நாங்கள் கொடுக்கப் போகிறோம். கோடிக்கணக்கான மக்களை லட்சாதிபதிகளாக மாற்றப் போகிறோம்,” என்றார் அவர்.

நீண்ட காலமாகவே பிரதமர் மோடி மற்றும் அம்பானி, அதானி ஆகியோருக்கு இடையிலுள்ள உறவு குறித்து எதிர்க்கட்சிகள் அடிக்கடி விமர்சித்து வருகின்றன. இந்நிலையில் அதே பெயர்களைப் பயன்படுத்தி ராகுல் காந்தியை மோடி விமர்சிக்கையில், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் அவருக்குப் பதிலடி கொடுக்க ஆரம்பித்துவிட்டன.

### எதிர்க்கட்சிகளின் எதிர்வினை

பிரியங்கா காந்தி மக்களவைத் தேர்தலுக்கான தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், ரேபரேலியில் நடந்த பரப்புரையின்போது மோடியின் கருத்துக்குப் பதில் கருத்து தெரிவித்துள்ளார்.

பிரியங்கா பேசுகையில், “ராகுல் காந்தி அதானியின் பெயர்களை உச்சரிப்பதில்லை என்று நரேந்திர மோடி இன்று பேசியுள்ளார். உண்மை என்னவெனில் அவர், தினசரி அதானி குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். அதானி குறித்து அனைத்து உண்மைகளையும் அவர் உங்கள் முன் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.”

மேலும், “பெரும் தொழிலதிபர்களுக்கும் நரேந்திர மோடிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை தினசரி ராகுல் உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். மோடி தனது நண்பர்களுக்காக 16 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்துள்ளார். ஆனால், விவசாயிகளுக்கு ஒரு ரூபாய்கூட வழங்கவில்லை. அவர் கண்டிப்பாக இதற்குப் பதில் சொல்லியாக வேண்டும்,” என்றார் அவர்.

“இந்த நாட்டின் ஒட்டுமொத்த வளங்களும் மோடியின் கோடீஸ்வர நண்பர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் துறைமுகங்கள், விமான நிலையங்கள், நிலக்கரி, மின்சார உற்பத்தி என அனைத்துமே அவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது,” என்றும் சுட்டிக்காட்டினார் பிரியங்கா காந்தி.





சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் பேசுகையில், “நாட்டின் பெரும் வணிக நிறுவனங்கள் குறித்து இத்தகைய கருத்துகளைத் தெரிவிப்பதன் மூலம், மோடி உலக அளவிலான இந்திய தொழில்துறையின் வணிக வாய்ப்புகளை கேள்விக்கு உள்ளாக்குகிறார்,” என்று கூறியுள்ளார்.

உத்தவ் தாக்ரே பிரிவைச் சேர்ந்த சிவசேனா தலைவர் பிரியங்கா சதுர்வேதி தனது எக்ஸ் பக்கத்தில், மோடியின் உரையைப் பகிர்ந்து, ‘ஹா ஹா இதுதான் இந்திய தேர்தலின் ஓ மை காட் மொமண்ட்” என்று எழுதியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “காலம் மாறிக் கொண்டிருக்கிறது. பழைய நண்பர்கள் இனிமேல் நண்பர்கள் கிடையாது. மூன்று கட்ட தேர்தல்களே முடிந்துள்ளது. அதற்குள் மோடி தனது சொந்த நண்பர்களையே தாக்கத் தொடங்கிவிட்டார். மோடிஜியின் பதவி ஊசலாடிக் கொண்டிருப்பதை இது உணர்த்துகிறது. இதுதான் தேர்தல் முடிவுகளின் உண்மையான ட்ரெண்ட்,” என்று ட்வீட் செய்துள்ளார்.

திரிணாமூல் காங்கிரசின் குணால் கோஷ் பேசுகையில், ‘இப்போது பாருங்கள் அவர்கள் அம்பானி மற்றும் அதானியன் குடும்பங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். கருப்புப் பணம் கொடுக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்று கேட்கிறார்கள். அப்படி உங்களிடம் ஏதேனும் தகவல் இருந்தால் சிபிஐ மற்றும் அமலாக்கத் துறைக்குத் தகவல் கொடுங்கள். உணவு, உடை, வீடு குறித்த பிரச்னைகளைப் பேசுவதற்குப் பதிலாக நீங்கள் நாடகம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்,” என்று விமர்சித்துள்ளார்.

நடிகர் பிரகாஷ்ராஜ், “இதோ வருங்கால எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார்,” என்று மோடியை சாடியுள்ளார்.

பாஜக தலைவர் ராஜ்யவர்தன் சிங்க் ரத்தோர், ‘2014 தேர்தலுக்குப் பிறகு தேர்தல் பத்திரம் வந்தது. கருப்புப் பணம் முடிவுக்கு வந்தது. இப்போது யாரெல்லாம் எந்தக் கட்சிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரியும். தற்போது அவர்கள் விமர்சிப்பதை விட்டுவிட்டார்கள். காரணம் அவர்கள் தொழிலதிபர்களிடம் இருந்து பணம் வாங்கியிருக்கலாம்,” என்று பேசியுள்ளார்.

### அம்பானி - அதானி பிரச்னையில் ராகுல் காந்தி செய்தது என்ன?

கடந்த 5 ஆண்டு மோடி அரசில், பல முறை அம்பானி - அதானி குடும்பப் பெயர்களை வைத்து ராகுல் காந்தி நரேந்திர மோடியை விமர்சித்துள்ளார். கடந்த பிப்ரவரி 2023இல், நாடாளுமன்ற கூட்டத்திலேயே மோடி மற்றும் கௌதம் அதானி விமானம் ஒன்றில் ஒன்றாக இருப்பது போன்ற படம் ஒன்றையும் ராகுல் காந்தி எடுத்துக் காட்டியிருந்தார். ஆனால், அந்தச் சம்பவத்தை நாடாளுமன்ற நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தும் கேமராக்கள் சரியாகக் காட்டவில்லை. இதுகுறித்து நாடாளுமன்ற நிகழ்வுகளை ஒளிபரப்பும் சன்சத் டிவி மீது காங்கிரஸ் குற்றச்சாட்டை முன்வைத்தது.

அதே பிப்ரவரி 2023இல், நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியிடம் ராகுல் காந்தி சில கேள்விகளை முன்வைத்தார். “எத்தனை முறை அதானியுடன் நீங்கள் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களுக்கு சென்றுள்ளீர்கள்? எத்தனை நாடுகளுக்கு உங்கள் பயணத்திற்குப் பிறகு அதானியும் அங்கு சென்றுள்ளார்? தேர்தல் பத்திரம் மூலம் எவ்வளவு பணம் பாஜகவுக்கு கிடைத்தது?”

சில நாட்கள் கழித்து மார்ச் 2023இல், சூரத் நீதிமன்றம் ராகுல் காந்திக்கு எதிரான அவதூறு வழக்கில் தீர்ப்பு வழங்கியது. இந்த வழக்கில் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து ராகுல் காந்தி மக்களவை உறுப்பினர் என்ற அந்தஸ்தையும் இழந்தார்.

பிறகு மார்ச் 2023இல் இதுகுறித்துப் பேசிய ராகுல் காந்தி, ‘எனது உரையைக் கண்டு பிரதமர் பயந்ததால் தான் நான் தகுதி நீக்கம் செய்யப்பட்டேன். அதானி குறித்து நான் பேசவிருந்த அடுத்த உரை பிரதமருக்கு பயத்தைத் தந்துள்ளது,” என்று கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பாஜக, ‘ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை. விதிகளை மதிக்காமல், எந்த ஆவணமும் இல்லாமல் அநாகரீகமான கருத்துகளைத் தெரிவித்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது,” என்று கூறியது.

இந்நிலையில் தற்போது அம்பானி - அதானியின் பெயர்களைக் குறிப்பிட்டு மோடி காங்கிரசை விமர்சித்திருக்கும் சூழலில், ராகுலின் பழைய படத்தைப் பகிர்ந்துள்ள காங்கிரஸ், மோடிக்கும் - அதானிக்கும் என்ன உறவு என்ற கேள்வி இன்னமும் அப்படியேதான் உள்ளது என்று தனது பதிவில் எழுதியுள்ளது.

சமீபத்தில் நடந்த ராமர் கோவில் திறப்பு விழாவில் முகேஷ் அம்பானியும் கலந்து கொண்டிருந்தார். இது குறித்து அப்போது கருத்து தெரிவித்த ராகுல் காந்தி, ‘ராம் மந்திர் நிகழ்ச்சியில் அம்பானி, அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய், அதானி ஆகியோர் காணப்பட்டனர். ஆனால் எந்த ஏழையும் காணப்படவில்லை,” என்று கூறினார்.

ஆனால், இந்த நிகழ்ச்சியில் ஐஸ்வர்யா ராய் மற்றும் கௌதம் அதானி கலந்து கொள்ளவில்லை. தனது தேர்தல் பரப்புரைகளில் தொடர்ந்து அம்பானி மற்றும் அதானியின் பெயர்களைப் பயன்படுத்தி வரும் ராகுல் காந்தி, பிரதமர் மோடி இந்தியாவின் ஏழை மக்களுடைய பணத்தை, நாட்டின் இரண்டு பெரும் தொழிலதிபர்களுக்கு வழங்கிவிட்டதாகக் குற்றம்சாட்டி வருகிறார்.

### ராகுலின் குற்றச்சாட்டுக்கு அம்பானி-அதானியின் பதில் என்ன?

ஜனவரி 2023இல், ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் குறித்தும், மோடியுடனான நட்பு குறித்தும் நேர்காணல் ஒன்றில் பேசியுள்ளார் கௌதம் அதானி.

அதில், “ராகுல் காந்தியால்தான் மக்களுக்கு அதானி என்ற பெயரே தெரிய வந்துள்ளது” என்று கூறினார் அவர். மோடி குறித்துப் பேசுகையில், “பிரதமர் மோடியிடம் இருந்து உங்களால் எந்தவிதமான தனிப்பட்ட உதவியையும் பெற முடியாது. ஆனால், அவருடனான அனுபவங்கள் சிறந்தது,” என்றார்.

மேலும் ராகுல் காந்தியை மதிப்பதாகவும், அதேநேரம் அவரது அறிக்கைகளை அரசியல் கருத்துகளாகவே பார்ப்பதாகவும் அதானி குறிப்பிட்டார்.

இந்தியா டிவி-யிடம் பேசிய கௌதம் அதானி, “2014 தேர்தலுக்குப் பிறகு ராகுல் ஜி எங்கள் மீது தொடுத்து வரும் தொடர் தாக்குதல்கள், அதானி யார் என்பதை அறிய உங்கள் அனைவருக்கும் வாய்ப்பளித்துள்ளது. அதனால்தான் இன்று ஒரு நேர்காணல் கொடுக்க உங்களது ஸ்டுடியோவில் நான் இருக்கிறேன்,” என்று கூறினார்.

ராகுல் வேண்டுமானால் கௌதம் அதானியை விமர்சிக்கலாம், ஆனால், அதானியோ “ராகுல் காந்தியை ஒரு மரியாதைக்குரிய தலைவராகப் பார்ப்பதாகவும், அவருடைய நாட்டின் முன்னேற்றத்தை விரும்பும் நோக்கத்தைத்தான் பார்ப்பதாகவும்” கூறினார்.

“அவர் அரசியலின் மீதுள்ள ஆர்வத்தால் தனது கருத்துகளைத் தெரிவிக்கிறார். ஆனால், அவற்றை எனது தலைக்கு ஏற்றிக் கொள்வதில்லை,” என்றார்.

ராகுல் காந்தி அதானி மட்டுமின்றி அம்பானி குறித்தும் தனது உரைகளில் பேசி வந்தாலும், அதற்கு அம்பானி இதுவரை எந்தப் பதில் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமை கண்டறியப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஒரு இலங்கைப் பிரஜை இல்லையென்பதால் பாராளுமன்ற உறுப்பினராக பதவிவகிப்பதற்கு சட்டரீதியாக தகுதியற்றவர் என்று கடந்தவாரம் உயர் நீதிமன்றம் அளித்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு சர்ச்சைக்குரிய கேள்விகள் சிலவற்றை எழுப்புகிறது.

டயானாவின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு எதிராக சமூகச் செயற்பாட்டாளர் ஒஷால ஹேரத் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை ஆட்சேபித்து அவர் செய்த மேன்முறையீட்டை விசாரணைசெய்த பின்னரே உயர்நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது. வேறு வழக்குகள் காரணமாக டயானா வெளிநாடு செல்வதற்கு கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதிமன்றம் தடையும் பிறப்பித்திருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்த டயானா, கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோதே அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கினார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னரும் அரசாங்கத்துக்கான அவரின் ஆதரவு தொடர்ந்தது. சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டார். இரவுப் பொருளாதாரம், கஞ்சா வளர்ப்பு பற்றியெல்லாம் அவரின் சர்ச்சைக்குரிய பேசுக்களை நாடறியும்.

டயானாவின் தகுதி நீக்கத்தால் பாராளுமன்றத்தில் ஏற்படும் வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டிருக்கிறார். கடந்த வருட முற்பகுதியில் நடத்தப்படவிருந்து பிறகு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். உள்ளூராட்சி தேர்தல் தற்போதைக்கு நடத்தப்படும் சாத்தியம் இல்லை என்பதால் மீண்டும் பாராளுமன்றம் வருவதற்கு இது அவருக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

டயானா வெளிநாட்டுப் பிரஜையாக இருந்து கொண்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாகும். கடந்தவருட முற்பகுதியில் குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு அளித்த வாக்குமூலத்தில் அவர் 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு தனக்கு பிரிட்டிஷ் பிரஜாவுரிமை தேவையில்லை என்று கூறும் ஆவணங்களைக் கையளித்து அந்த பிரஜாவுரிமையை துறந்துவிட்டதாகவும் இரட்டைப் பிரஜாவுரிமையை ஒருபோதும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறியிருந்தார். அதன் பிரகாரம் நோக்கும்போது எந்தவொரு நாட்டின் பிரைஜயாகவும் இல்லாமல் அவர் கடந்த நான்கு வருடகாலமாக பாராளுமன்ற உறுப்பிராக இருந்து வந்திருக்கிறார். இதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பது முக்கியமான கேள்வி.

குடிவரவு, குடியகல்வு சட்டங்களை மீறிச்செயற்படுவதாகச் சந்தேகிக்கப்படும் மிகவும் சிலருக்கு இந்த நாட்டில் விசேட சலுகை வழங்கப்பட்டிருக்கிறது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பில் பிரத்தியேகமாக சுட்டிக்காட்டியிருக்கிறது.

டயானா இரு பிரிட்டிஷ் கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த அதேவேளை இரு இலங்கை இராஜதந்திர கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டதாகவும் அவற்றைப் பெறுவதற்கு போலி பிறப்புச்சாட்சிப்பத்திரம் உட்பட மோசடி செய்யப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்ததாகவும் ஒஷால ஹேரத் முறையிட்டிருந்தார். இலங்கை கடவுச்சீட்டு ஒன்றைப் பெறுவதற்கு டயானா போலி தேசிய அடையாள அட்டையையும் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பித்ததை நிரூபிக்க போதிய சான்றுகள் இருந்ததாக கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அப்போது கூறியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பாராளுமன்றத்தில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் பதவிநீக்கப்படுகின்ற இரண்டாவது உறுப்பினர் டயானா. தனது கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானத்துக்கு முரணாக கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் 2021 பட்ஜெட்டுக்கு ஆதரவளித்தமைக்காக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நஷீர் அஹமட்டை கடந்த வருட இறுதியில் உயர்நீதிமன்றம் தகுதி நீக்கம் செய்தது.

நஷீர் அஹமட் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தபோது வேறு பல உறுப்பினர்களின் பதவிக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று கருதப்பட்டது. ஏனென்றால் தற்போதைய பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியை தவிர மற்றைய சகல கட்சிகளினதும் உறுப்பினர்கள் பலர் தங்கள் கட்சிகளில் இருந்து பிரிந்து சுயாதீனமாகச் சபைக்குள் செயற்படுகிறார்கள். நஷீர் அஹமட்டுக்கு எதிரான தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக கட்சிகளின் தலைமைத்துவங்கள் சட்டநடவடிக்கையை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. அரசியல் அனுகூலத்துக்காக சட்டவிரோதமான நடவடிக்கைகள் கண்டும்காணாமல் விடப்படும் போக்கிற்கு இதுவும் ஒரு உதாரணம்.

டயானாவுக்கு எதிரான தீரப்பையடுத்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டபூர்வத்தன்மை குறித்தும் கேள்வியெழுப்பப்பட்டது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் தொடர்ந்து அங்கம் வகிக்கமுடியுமா என்று கேட்டு எவராவது நீதிமன்றத்தை நாடமுடியும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் கூறினார்.



பிரிட்டிஷ் பிரஜாவுரிகையை துறந்துவிட்டதாக குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் கூறிய டயானா கமகே இரட்டைப் பிரஜாவுரிமையையும் பெற்றுக்கொள்ளவில்லை. எந்தவொரு நாட்டினதும் பிரஜையாக இல்லாத ஒருவர் எவ்வாறு பாராளுமன்றம் வரமுடிந்தது? நாடற்ற ஒருவருக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்கிய ஒரே நாடு இலங்கையாக இருக்குமோ?

'டயானா இலங்கை பிரஜை இல்லை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதால் அவர் ஒரு அரசியல் கட்சியை பதிவுசெய்யமுடியுமா என்று எவரும் கேள்வியெழுப்பலாம்.

டயானாவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை சட்டரீதியாக செல்லுபடியாகுமா என்று கேள்வியெழுப்பமுடியும். டயானா கையெழுத்திட்ட குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்களின் நியமனப்பத்திரங்களின் செல்லுபடித்தன்மையும் கேள்விக்குரியது" என்று விஜேசேகர கூறினார்.

டயானாவும் அவரின் கணவர் சேனக டி சில்வாவும் நடத்திய 'அபே ஜாதிக பெரமுன" வின் கட்டுப்பாட்டை ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்த சஜித் பிரேமதாச தலைமையிலான அணியினரிடம் கையளித்தமைக்கு பிரதியுபகாரமாகவே டயானா தேசியப்பட்டில் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதன் காரணமாகவே அவரின் பதவிநீக்கத்தை அடுத்து இந்த கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

ஆனால், இவற்றுக்கான பதிலை ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளை விடவும் மிகவும் தெளிவாக தந்திருக்கிறார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய.

இலங்கைப் பிரஜை இல்லாத ஒருவர் அரசியல் கட்சி ஒன்றை பதிவுசெய்வதற்கு சட்டரீதியான எந்த



வீரகத்தி தனபாலசிங்கம்

தடையும் கிடையாது என்று கூறியிருக்கும் அவர் இலங்கைப் பிரஜையாக இல்லாதவர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதையும் பாராளுமன்ற உறூப்பினர்களாக வருவதையும் மாத்திரமே இலங்கைச் சட்டம் தடுக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

டயானா ஒருபோதும் "அபே ஜாதிக பெரமுனவின்" பொதுச் செயலாளராக இருக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் நியமனப்பத்திரங்களில் அவர் கைச்சாத்திடவும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசியல் கூட்டணியில் இருந்து வெளியேறி காலஞ்சென்ற மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியாராச்சியுமே அபே ஜாதிக பெரமுனவை ஆரம்பித்தனர். அந்த கட்சியின் பொதுச் செயலாளராக ருவான் பேர்டினண்டஸ் இருந்தார். பிறகு அந்த பொறுப்பை டயானாவின் கணவர் ஏற்றுக்கொண்டார் என்று தேசப்பிரிய கூறியிருக்கிறார்.

அதேவேளை, டயானாவுக்கு முன்னர் வெளிநாட்டுப் பிரஜாவுரிமை தொடர்பான பிரச்சினையில் நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர் நடிகை கீதா குமாரசிங்க. 2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக காலி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவானபோது குமாரசிங்க இலங்கைப் பிரஜையாகவும் சுவிட்சர்லாந்தின் பிரஜையாகவும் இருந்தார். அந்த வேளையில் நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்றிய அரசியலமைப்புக்கான 19 வது திருத்தம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை தடை செய்திருந்தது.

தற்போது டயானாவுக்கு எதிரான தீர்ப்பையடுத்து பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் மீது மக்களின் கவனம் திரும்புவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னர் தகவல் அறிவதற்கான உரிமையைப் பயன்படுத்தி இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருப்பவர்களின் பட்டியலை குடிவரவு திணைக்களத்திடம் கேட்டபோது அந்த விபரங்களை கண்டறிவதற்கான ஒரு பொறிமுறை தங்களிடம் கிடையாது என்று கட்டுப்பாட்டாளர் பதிலளித்ததாக பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கடந்தவாரம் கூறினார்.

இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்த ஒரு அரசியல் குடும்பத்தின் இரு உறுப்பினர்களை மையமாகவைத்து கடந்த எட்டுவருட காலத்திற்குள் அரசியலமைப்புக்கு மூன்று தடவைகள் திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட விசித்திரத்தை நாம் கண்டோம்.

முதலில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக நல்லாட்சி அரசாங்கம் கொண்டுவந்த 19 வது திருத்தம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை தடைசெய்தது. பிறகு கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிப்பதற்காக கொண்டுவரப்பட்ட 20 வது திருத்தம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு மீண்டும் அனுமதித்தது. இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சியை அடுத்து ராஜபக்சாக்கள் அதிகாரத்தில் இருந்து இறங்கிய பிறகு ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அரசாங்கம் 2022 அக்டோபரில் கொண்டு வந்த 21வது திருத்தம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை மீண்டும் தடை செய்தது.

அந்த திருத்தம் நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டபோதிலும், இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருப்பதாக கருதப்படும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் பதவி விலகவில்லை.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுமனே கூடிக் கலைவதில் பயனில்லை! முடிவான தீர்மானத்துக்கு வர வேண்டும்!

பனங்காட்டான்

ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டிய கால அட்டவணையை தேர்தல் ஆணையம் அறிவித்து விட்டது. அடுத்த ஐந்து மாதங்கள் இந்தக் குட்டித்தீவு அமர்க்களமாகப் போகிறது.

தேர்தல் ஆணையம் தனது பணியை ஒழுங்காக செய்துள்ளதாயினும், ஜனாதிபதியே சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டவராக இருப்பதால், அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் பலரிடம் இருக்கிறது.

கடந்த வருடம் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் வேட்புமனுக்கள் தாக்கலாகி எல்லா ஏற்பாடுகளும் முடுக்கி விடப்பட்டதாயினும் இன்னமும் இடம்பெறவில்லை. அரசிடம் போதிய நிதிவளம் இல்லை என்று கைவிரிக்கப்பட்டதால் தேர்தல் காணாமல் போய்விட்டது. இதன் பின்னால் எந்த மறைகரம் காய்களை நகர்த்தியது என்பது ரகசியமல்ல.

இப்போது, ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகத்துக்கு, நடைபெறாது போன உள்ளூராட்சித் தேர்தலே முக்கிய காரணமாக உள்ளது. சஜித் பிரேமதாசவும், அனுர குமார திசநாயக்கவும் தங்கள் கட்சிகள் சார்பில் போட்டியிடுவதற்கான பரப்புரைகளை ஆரம்பித்து விட்டனர். ரணில் விக்கிரமசிங்க இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லையாயினும் அவரே இரவு பகலாக இதற்கான சித்து விளையாட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்சவுக்கும், ரணிலுக்கும் இடையில் ஐந்து முக்கிய சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. இதில் மூன்றாம் நபர் எவரும் சேர்க்கப்படவில்லை. அரசல்புரசலாகவே தகவல்கள் கசிகின்றன. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தலை நடத்த வேண்டுமென்பதை பசில் ரணிலிடம் வலியுறுத்தி வருகிறார்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் பெரமுன ஜனாதிபதி தேர்தலில் தனித்துப் போட்டியிட முடியாத இக்கட்டில் இருக்கிறது. அதேசமயம் ரணிலைத் தவிர வேறெவருடனும் கூட்டுச் சேர முடியாத நிலையிலும் உள்ளது. இதனை ரணில் நன்கறிந்து வைத்திருப்பதால் பசிலின் கோரிக்கைக்கு மசிந்து போகாமல் நாட்களை இழுத்துக் கொண்டிருக்கிறார். ரணில் தோற்கடிக்கப்படுவதையும் அதனுடன் பெரமுனவும் கீழ் விழுவதையும் பெரமுன விரும்பவில்லை. இந்த நெருக்கடியே ரணிலுக்கான அதிர்ஸ்ட காலம்.

நாடாளுமன்றத்தில் தங்கள் தயவிலேயே ரணில் பெரும்பான்மையுடன் இருப்பதாக அவருக்கு நினைவூட்டி, நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தும் எண்ணத்தை பசில் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். பெரமுனவுக்கு கூடுதல் ஆசனங்கள் இருப்பதால் ரணிலை வளைத்துப் போடலாமென பசில் நம்புகிறார் போலும். பொதுத் தேர்தலை முதலில் நடத்தி பெரும்பான்மையை பெரமுன பெற்றுவிட்டால், ரணிலுக்கு பெப்பே காட்டிவிட்டு ஜனாதிபதி தேர்தலில் பெரமுன சார்பில் ஒருவரை நிறுத்தி வெற்றி பெறலாமென்ற எதிர்பார்ப்பு பசிலிடம் மேலோங்கிக் காணப்படுகிறது.

இதனை முற்கூட்டியே அறிந்து வைத்துள்ள ரணில், ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த விரும்புகிறார். இப்போது ரணிலுக்கும் பசிலுக்கும் இடையே ஆடு - புலி விளையாட்டு இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. ஜே.ஆரிடம் கற்ற நரி மூளையை இங்கு தந்திரமாக ரணில் பயன்படுத்துகிறார்.

பசிலுடன் இரகசிய பேச்சுகளை நடத்திவரும் அதேசமயம் மகிந்தவுடனும் ரணில் தனித்தனி பேச்சுகளை தொடருகிறார். அதேவேளை, சஜித் அணியிலிருந்து சிலரை தம்பக்கம் இழுக்கும் மாயமான்

> பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி எவரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியாதென்ற மகிந்த அணியின் அறிவிப்பு தமிழர்களுக்கான ஒரு சவால். இதுதான் நிலைமையெனில், தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை பூகோளத்துக்குப் புலப்படுத்த பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது அவசியமாகிறது. இதன் பின்னரும் தமிழர்கள் சிங்களவர் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டுமென கருதுபவர்களை எந்த வகைக்குள் அடக்கலாம்?

காட்சிகளையும் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார். சமகாலத்தில் சஜித் தலைமையிலான அரசியல் கட்சியை சட்டத்துக்கு உட்பட்ட வகையில் இல்லாமற் செய்யும் முயற்சிகளும் இவர் தரப்பால் மேற்கொள்ளப்படுகிறது.

மே தின மேடையில் கட்சித் தாவல்கள் சிலரை அடையாளப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாயினும், ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் நான்கு மாதங்கள் இருப்பதால் தமது போட்டியை அறிவித்த பின்னர் அவர்களின் மேடையேற்றத்தை நடத்துவதற்கு ஏற்பாடாகி இருப்பதாக சொல்லப்படுகிறது.

சமகாலத்தில் பெரமுன தரப்பிலிருந்து வித்தியாசமான ஓர் அறிவித்தல் வந்துள்ளது. பொதுஜன பெரமுனவின் ஆதரவு பெற்றால் மட்டுமே ஒருவர் ஜனாதிபதியாக முடியுமென்று மகிந்த அணியைச் சேர்ந்தவரான [illegible] தெரிவித்துள்ளார். அதாவது, பெரமுனவின் ஆதரவைப் பெற முடியாதவர் வரப்போகும் தேர்தலில் ஜனாதிபதியாக முடியாதென்பது இந்த அறிவிப்பு. இது மறைமுகமாக ரணிலுக்கு வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்.

"அங்குமிங்கும் அலைந்து ஆட்களை இழுப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். எங்கள் ஆதரவை நீங்கள் பெறுவீர்கள் என்றால், நீங்களே அடுத்த ஜனாதிபதி' என்று மகிந்த தரப்பு ரணிலுக்கு கூறியிருப்பதை இதனூடாகக் கவனிக்க முடிகிறது. இதனை சீரியஸான ஆலோசனையாகவும் பார்க்க முடிகிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் அறுபத்தைந்து லட்சம் வாக்குகளைப் பெற்ற பெரமுன, அந்த வெற்றி நம்பிக்கையில் இப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பதையும் இந்த அறிவிப்பினூடாக காணமுடிகிறது.

யார் என்னதான் சொன்னாலும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தமது ஐக்கிய தேசிய கட்சி கணிசமான ஆசனங்களைப் பெற வேண்டுமென்பதை இலக்காக வைத்து ரணில் தனது ஆட்டங்களை மேற்கொண்டு வருகிறார். தமது பாட்டனார்களான டி.ஆர்.விஜேவர்த்தனவும், டி.எஸ்.சேனநாயக்கவும் உருவாக்கிய ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் அரியாசனம் ஏற்றுவதும், தமது தாய்மாமன் மகனான ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவராக தற்போது இருக்கும் றுவான் விஜேவர்த்தனவிடம் கட்சியைப் பாரப்படுத்துவதும் இவரது அடிமனதுத் திட்டம்.

அதற்காக எந்தப் பிசாசின் உதவியையும் பெறுவதற்கு ரணில் தயாராகவுள்ளார். அந்த இலக்கை நோக்கியே அவரது சகல நடவடிக்கைகளும் தொடரும் என்பது மகிந்த தரப்புக்கும் தெரியாததல்ல. இதனை ஏனைய போட்டியாளர்களும் நன்கறிவர். பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி எவரும் ஜனாதிபதியாக முடியாதென்ற மகிந்த தரப்பின் அறிவிப்பு ரணிலுக்கு மட்டுமன்றி தாயகத் தமிழருக்கான சவாலும்கூட.

வரப்போகின்ற ஜனாதிபதி தேர்தலில் மூன்று பிரதான சிங்கள வேட்பாளர்கள் போட்டியிடுவதால் ஐம்பது வீதமான வாக்குகளை எவராலும் பெற முடியாது போகுமென்ற கருத்து பரவலாக உள்ளது. இலங்கை சிங்கள தேசம் - பௌத்த மத நாடு என்ற பேரினவாத சிந்தனையின் வெளிப்பாடாக, தமிழரின் வாக்கின்றி எவரும் ஜனாதிபதியாகலாம் என்பதை பெரமுனவின் கருத்து வெளிப்படுத்துகிறது.

தமிழர் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளர் தேவையில்லையென்று கருதும் தமிழர்களுக்கு ராஜபக்சக்கள் தரப்பிலிருந்து வந்திருக்கும் சூடு இது. தமிழர் வாக்குகளின்றி, பெரமுனவின் சிங்கள வாக்குகளால் ஒரு சிங்கள ஜனாதிபதியை தெரிவு செய்ய முடியுமென்ற நம்பிக்கை மகிந்த குடும்பத்துக்கு இப்போதும் இருக்கிறது. இவர் சொல்வது தான் நிஜமெனில் இலங்கையில் எந்தச் சிங்களவரும் தமிழரின் வாக்குகளின்றி ஜனாதிபதியாகலாம். எனவே, அவர்களுக்கு தமிழர் வாக்களிக்க வேண்டிய தேவையில்லை.

தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கான எண்ணங்களை வெளிப்படுத்தி ஒரு வேட்பாளர் தமிழர் தரப்பில் நிறுத்தப்பட்டால் அது தமிழரின் ஒன்றுபட்ட ஒற்றுமையை வெளிப்படுத்தும். ஏறத்தாழ ஒரு சர்வஜன வாக்கெடுப்பு போலவும் அமையலாம். இவ்விடயத்தில் ஆரம்பத்திலிருந்தே சிலர் அதிகப் பிரசங்கிகளாகவும், விளக்கமற்ற கருத்துகளை பரப்புபவர்களாகவும் இருப்பதைக் காணமுடிகிறது. தமிழர் ஒருவர் போட்டியிட்டால் சிங்களம் கொதிக்கப் போகிறது, இனவாதம் மீண்டும் தலைதூக்கப் போகிறது, அவர்களை வம்புக்கு இழுக்க வேண்டாமென்று பல்வேறு வித கருத்துகளை இவர்கள் தாங்களாகவே பரப்ப ஆரம்பித்துள்ளனர்.

இதற்குள் யார் அந்தப் பொது வேட்பாளர் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. சிங்களத்துக்கு வாக்களிக்க வேண்டுமென்கிற சில அவசர குடுக்கைகளின் குரல் இது. தோற்பதற்காக ஏன் போட்டியிட வேண்டுமென்கிற அறிவிலிகளையும் பார்க்க முடிகிறது. இவ்விடயத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி (தமிழ் காங்கிரஸ்) தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்பதை அறிவித்துவிட்டது. இது அவர்கள் நிலைப்பாடு. மற்றையோர் தான் இப்போது தாமும் குழப்பத்தில் அகப்பட்டு மற்றவர்களையும் குழப்பத்துக்கு உள்ளாக்குகின்றனர்.

பொதுவேட்பாளர் வேண்டாம் என்பவர்கள் சிங்கள வேட்பாளருக்கு தமிழர் வாக்களிக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் என்பது புரிகிறது. இதனை ஏன் அவர்கள் பகிரங்கமாகக் கூறக்கூடாது.

இயக்க அரசியலும், இணக்க அரசியலும் சிங்கள இன அரசியலுடன் இயைந்து செல்ல முடியாதவை என்பதை பட்டறிவு பெற்ற பின்னரும், சிங்கள வேட்பாளருக்கே தமிழர் வாக்களிக்க வேண்டுமென விரும்புபவர்களை இலகுவாக அடையாளம் காணும் நேரமிது.

முள்ளிவாய்க்கால் ஈர நினைவுகள் காயாது இருக்கும் இந்த மாதம் 19ம் திகதி பொதுவேட்பாளர் விடயமாக முடிவெடுப்பதற்கு தமிழரசுக் கட்சி கூடுகிறது என்று ஒரு செய்தி. சுமந்திரன், சாணக்கியன், சி.வி.கே.சிவஞானம் போன்றோரின் கருத்துகள் பொதுவேட்பாளருக்கு எதிராக ஏற்கனவே வெளிவந்து விட்டன. கிளிநொச்சி சிறீதரன் கொள்கை அளவில் பொதுவேட்பாளரின் பக்கம்.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தலை இரண்டு பக்கமும் ஆடும் வல்லமையானது. ஆகட்டும் பார்க்கலாம் எனும் தமிழக முன்னாள் முதல்வர் காமராஜரின் பாணியில், எல்லாவற்றுக்கும் ஓம் தம்பி சொல்லி பழக்கப்பட்டு போனவர் மாவையர். பொதுவேட்பாளர் கரு சும்மா விளையாட்டுக்கானது அல்ல. வெறுமனேயே செய்திக்கானதும் அல்ல. தமிழரின் தாயகக் கோட்பாட்டு அரசியலை பூகோள அரசியலுக்கு புட்டுக் காட்ட நடத்தப்படும் வாக்களிப்பு.

கூடினோம், அலசினோம், கதைத்தோம், மக்களுடன் பேசுவோம், மீண்டும் கூடுவோம், உரிய நேரத்தில் முடிவெடுப்போம் என்ற வழமையான பாணியில் தமிழரசுக் கட்சி 19ம் திகதி கூடிக் கலையுமென்றால், கடந்த பொதுத்தேர்தலில் சிங்கள தேசத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திர கட்சிக்கும் அவர்களின் மக்கள் வழங்கிய தீர்ப்பை சம்பந்தப்பட்டவர்கள் ஒரு தடவை நினைத்துப் பார்ப்பது நல்லது. ●

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழர் தகவல் சஞ்சிகையின் 33வது ஆண்டு மலர் 'இளங்காலைச் சுவடு'



கனடா மூர்த்தி

கனடாவில் 1991ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாதமும் 5ந் திகதியன்று தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் வருடாந்த விருது வழங்கல் விழாவும், ஆண்டு மலர் வெளியீடும் கடந்த ஏப்ரல் மாதம் 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோவில் நிகழ்ந்தேறியது. 'இளங்காலைச் சுவடு' என்ற சிறப்பு மகுடத்தில் வெளியாகியிருக்கும் 33வது ஆண்டுப் பூர்த்தி மலர், புலம்பெயர்ந்தோர் வாழ்வு குறித்து அறிய விரும்புபவர்களுக்கும், ஆராய்பவர்களுக்கும் உதவிடும் வகையில் பல்வேறு கட்டுரைகளைத் தாங்கியுள்ளது.

இந்த மலர் அண்மையில் மறைந்த கவிநாயகர் கந்தவனத்துக்கு அர்ப்பிதம் செய்யப்பட்டிருக்கிறது. முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களின் 'தொடர்ந்து செல்வோம்' - **'Let us keep moving'** என்ற தமிழிலும் ஆங்கிலத்திலுமான ஆசிரிய தலையங்கம் தமிழ்க் கனடியர்களின் புதிய நம்பிக்கைகளை வெளிப்படுத்தி நிற்கிறது. தொடர்ச்சியாக, தமிழர் தகவலின் சுருக்கமான வரலாற்றுக் குறிப்பும் தரப்பட்டிருக்கிறது. மலரின் முதல் பக்கங்களில் 1992 முதல் 2023வரை வெளியான தமிழர் தகவல் ஆண்டு மலர்கள் ஒவ்வொன்றினதும் அட்டைப்படங்களும், இளங்காலைச் சுவடு மலரில் எழுதியிருக்கும் சகல படைப்பாளர்களின் முகப்படங்களும், வெளியீட்டுக் குழுவினரின் முகப்படங்களும் வர்ண வடிவில் இடம்பெற்றுள்ளன.

மலருக்கான கட்டுரைகள் கனடாவிலிருந்து மட்டுமன்றி இலங்கை, இங்கிலாந்து, ஜேர்மனி, ஆஸ்திரேலியா உட்பட பிற வேறுநாடுகளிலிருந்தும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெறப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது. இலகு மொழிநடையில், காத்திரமான உள்ளடக்கத்தோடு கட்டுரைகளைத் தாங்கி வெளியாகியிருக்கும் இந்த மலரிலிருக்கும் பெரும்பான்மையான ஆங்கிலக் கட்டுரைகள் கனடாவின் இளைய தலைமுறையினரிடமிருந்து பெறப்பட்டவை. இளைஞர்களான ஐஸ்வர்யா, அக்சன், கிருன்சியா, அபினா, ஸ்ரிபானி, அக்ஷேய், அபினயா, சௌமியா, டயான், பிரிட்னி, கெல்வின், அர்ச்சனா, ஜூலிஆன், ஆரணி, அஜந்தி ஆகிய இளையோரால் எழுதப்பட்டு தனிப்பகுதியாக அமையும் வண்ணம் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. கனடாவிலேயே பிறந்து வளர்ந்துவரும் இளைஞர்களில் சிலர் முழுக்க முழுக்க தமிழில் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதும் இவ்விடத்தில் சிறப்புறக் குறிப்பிடத்தக்கது. மேலும் துறைசார் வல்லுனர்கள் சிலரும் தமது கட்டுரைகளை ஆங்கிலத்தில் தந்திருக்கிறார்கள். எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் 'எங்கேயோ இப்ப மூண்டு மணி" தமிழ்ச்சிறுகதையின் **Somewhere It Is Three O'Clock Rightnow** என்ற தலைப்பிலான ஆங்கில மொழிபெயர்ப்பும் அவற்றில் ஒன்றாக அமைகிறது.

### சமூகம் பற்றிய கட்டுரைகள்

ஆரம்பத்தில் கனடாவிற்கான ஈழத்தமிழர் சமூகம் அகதி அந்தஸ்து கோரியபடி வர ஆரம்பித்தது. பின்னர் ஸ்பொன்ஸர்ஷிப் எனப்படும் ஆதரவு அழைப்பு ஊடாக பெருக ஆரம்பித்தது. கனடாவிற்கான புலம்பெயர் பழைய வரலாறு இப்படி இருக்க, இன்றைய காலகட்டத்தில் புதிய வகையில் ஈழத்தமிழர்கள் கனடா வருகிறார்கள். விருந்தினர் வருகை என அடையாளம் காணப்படும் ஷவிஸிட்டர் விசா; பெற்று கனடா வருபவர்களே அந்தப் புதிய வகையினராகும். அதிகரித்து வரும் இவர்கள் தமிழ்க் கனடியச் சமூகத்தின் ஒரு புதிய பகுதியாகத் தனித்துத் தென்படுவது கவனிக்கத்தக்கது.

விஸிட்டர் விஸாவில் தற்போது வருபவர்களது மனோநிலை இதற்கு முன்பு அகதியாக வந்தவர்கள் அல்லது ஸ்பொன்ஸர்ஷிப் பெற்று வந்தவர்கள் கொண்டிருந்த மனோநிலையிலிருந்து பெருமளவு மாறுபட்டு இருப்பதை நாம் கவனிக்கலாம். புதிய வகையினரின் எதிர்பார்ப்புக்களும், அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களும் இதற்கு முந்தைய புலம்பெயர் தமிழ்சமூகம் கொண்டிருந்ததைவிடவும் பெருமளவில் மாறுபட்டிருக்கிறது. "வேலைகள் உட்பட எல்லாமே கனடாவில் மிகச் சுலபமாகக் கிடைத்துவிடும்" என்ற நினைப்புடன் கனடாவில் கால் வைப்பவர்கள்தான் அவர்களுள் அதிகம். அத்துடன், "முடிந்தால் இருப்போம், இல்லையேல் திரும்பிப் போய்விடுவோம்" என்ற தெளிவான எண்ணப்பாட்டுடன் தான் கனடாவில் அவர்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்கள். பெருந்தொகை செலவு செய்து வந்திருந்தாலும், கனடா வாழ்க்கை பிடிக்காமல் பலர் திரும்பியும் போகிறார்கள். இவர்களின் இந்த முற்றிலும் வேறுபட்ட மனப்போக்குக் குறித்துத் தமிழ்க் கனடிய சமூகம் இன்னும் வெளிப்படையாகப் பேச ஆரம்பிக்கவில்லை. ஆயினும், இந்த மலரில் இந்தப் புதிய குழுவினரைத் தொடர்புபடுத்திப் பல கட்டுரைகள் இருக்கின்றன.

பொன்னையா விவேகானந்தன் எழுதியிருக்கும் "ஈழத்தமிழரின் புலப்பெயர்வு தசாப்தங்களின் மாற்றம்" கட்டுரை இந்த விடயத்தை ஆழமாகத் தொட்டுச் செல்கிறது. அதேபோல வே.விவேகானந்தன் எழுதியிருக்கும் 'புயல்வேகப் புலப்பெயர்வால் தாயகம் எதிர் கொள்ளும் சவால்" என்ற கட்டுரை இந்தப் புதிய புலம்பெயர்வின் ஆரம்பப் புள்ளியான இலங்கையில் நடக்கும் சிக்கல்களைப்பேசி பல தகவல்களைத் தருகிறது. இலங்கையிலிருந்து வேதநாயகன் தபேந்திரன் எழுதியிருக்கும் ஷஉணர்வு நிலைக் குழப்பம்; என்ற தலைப்பில் வரும் கட்டுரையில், புலம்பெயர்தலால் ஏற்படும் பிரிவின் காரணமாக தாயகத்தில் பலரது வீடுகளில் தொடர ஆர்ம்பிக்கும் கள்ளத்தொடர்பு என்று நாம் சொல்லும் மண ஒழுக்கம் தவறப்படுவது குறித்து விபரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இக் கட்டுரை ஒழுக்கம் என்ற பெயரில் பெண்களைச் சற்று இழிவு செய்கிறது என யாராவது கருதுவார்களேயானால் இதே மலரில், திருவள்ளுவரின் பெண்வழிச் சேறலும் சில சந்தேகங்களும்; என்ற தலைப்பில் இரா சம்பந்தன் எழுதியிருக்கும் கட்டுரை அதற்கு மாற்றுவிளக்கம் தருகிறது. இந்த விடயத்திற்குப் பொருத்தமான கட்டுரையாக வழக்கறிஞர் மனுவல் ஜேசுதாசன் எழுதியிருக்கும் ஷஒத்துழைப்புடன் மனமொத்த மணவிலக்கல்; என்ற கட்டுரையையும் குறிப்பிடலாம். பேராசிரியர் அமுது யோசெப் சந்திரகாந்தன் எழுதியிருக்கும் ஷவேப்பமர நிழலும், மேப்பிள்மரத் தேனும்; கட்டுரையானது உலக அரங்கில் கனடாவின் உயர்ச்சி பற்றி பல விபரங்களை தொகுத்துத் தந்திருக்கிறது. இக் கட்டுரை கனடா வந்துவிட்ட அல்லது வரவிருக்கும் புதியவர்களுக்கு ஒரு கையேடாகத் தரப்படின், கனடாவை அவர்களால் இலகுவாகப் புரிந்து கொள்ள உதவும்.

### கனடாவின் மாற்றங்கள் குறித்த கட்டுரைகள்

செல்வா வெற்றிவேல் 2023ம் ஆண்டு கனடாவில் வீடு விற்பனைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை அலசியிருக்கிறார். **2024 Economic Outlook|** என்ற தலைப்பில் ருக்சன் பரா உலகப் பொருளியல் அரங்கில் கனடா எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்களை ஆங்கிலத்தில் விளக்கியிருக்கிறார். ஷகனடாவின் கல்விக்கொள்கையும் தற்கால நெருக்கடிகளும்; என்ற தலைப்பில் தங்கராசா சிவபாலு கனடாவின் கல்வி நிலை குறித்து அலசியிருக்கிறார். ஷகாலநிலை மாற்றம் கனடாவுக்கான சவால்; என்ற தலைப்பில் ஆரணி ஞானநாயகன் கனடா காணும் காலநிலை மாற்றங்களை தொகுத்துத் தந்திருக்கிறார்.




### சமூக அறிவியல் கட்டுரைகள்

ஷநல்வாழ்வுக்கான புதிய பாதை; என்ற தலைப்பில் நீதன் சண் எழுதியிருக்கும் கட்டுரை கனடியத் தமிழ்ச் சமூகத்தின் உளநலத் தேவைகளில் கவனம் செலுத்துவதன் அவசியத்தை சொல்கிறது. அத்துடன் **Community service and Volunteerism|** என்ற தலைப்பில் ஜெயசிங் டேவிட் சமூக சேவைகள் குறித்த பல விபரங்ளை ஆங்கிலத்தில் தந்திருக்கிறார்.

### முதியோர் பற்றிய கட்டுரைகள்

கனடிய தமிழ்ச் சமூகம் காணும் இன்னொரு பிரச்னை முதியோர்கள் பராமரிப்பு. 1980களில் புலம்பெயர்ந்த இளைஞர்கள் பலருங்கூட இன்று முதியவர்களாகி வருவதால், அவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சனைகள்கூட முதியோர்கள் பிரச்சனைகளாக பலராலும் கணிக்கப்படுகின்றன. அந்த வகைப் பிரச்சனைகளை வைத்து பல கட்டுரைகள் மலரில் இடம்பெற்றிருக்கின்றன. 'விழுவது விளையாட்டல்ல' என்ற தலைப்பில் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா, முதியோர் தடக்கி விழுவது குறித்து எழுதியிருக்கிறார். நான்கு பக்கங்களில் சிறப்புற எழுதப்பட்டிருக்கும் இக்கட்டுரை முதியோர் தமது உடற்சமநி[illegible] தருகிறது. [illegible] 'முதுமை தேடும்' என்ற தலைப்பில் கட்டுரையைத் தருகிறார். அதேபோல கனகேஸ்வரி நடராஜா 'நீண்ட ஆயுள்' என்ற தலைப்பிலும், ஷநீண்ட ஆயுளின் ரகசியம்; தலைப்பில் சின்னையா சிவனேசன் எழுதியிருப்பதும், டாக்டர் அ. சண்முகவடிவேல் பற்சிகிச்சைத் திட்டம் குறித்துத் விபரித்திருப்பதும், முனைவர் பால சிவகடாட்சம் ஷமருத்துவத் தேவைகளுக்காக இந்தியாவில் கிடைக்கும் சிகிச்சைகள்; பற்றியும், சிகிச்சைகளுக்காக வெளிநாட்டினர் கேரளா செல்வது ஏன் என்பது பற்றியும், இந்திரன் இந்திரகிருஷ்ணன் இருதய நோய், நீரிழிவு வழிவரும் 'மெற்றபோலிக் சின்ட்ரோம்' (**Metabolic Syndrome**) குறித்து ஆங்கிலத்திலும், குடும்ப மருத்துவர் விக்டர் ஜான் பிகுடாரோ நீரிழிவு நோயாளிகளுக்கான 'சர்க்கரை அளவீட்டு முறைக் கருவிகள்' குறித்து எழுதியிருப்பதுமாக பலரும் பலகோணங்களில் முதியோர் பிரச்சனைகளை அலசியிருக்கிறார்கள். மரணம் குறித்து வழக்கறிஞர் நாதன் ஸ்ரீதரன் 'கருணை மரணம்' என்ற தலைப்பிலும், 'வாழ்வின் முடிவுடன் தொடர்பான விடயங்கள்' என சிவதர்மன் விலோசன் இறுதிச் சடங்குகள் குறித்து எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

### குழந்தைகள் பற்றிய கட்டுரைகள்

முதியோர் பற்றி மட்டுமல்ல சிறுவர்கள் குழந்தைகளுக்கான கட்டுரைகளும் இந்த மலரில் உண்டு. அவற்றில் சிறுவர்களுக்கான நிதி பற்றிய அறிவூட்டல்களைத் தரும் காந்தி செல்வராஜாவின் கட்டுரை கவனிக்கத்தக்கது. அதனுடன் **'What Does My Baby See'** என்ற மௌலியா செல்வராஜாவின் கட்டுரை குழந்தைகள் குறித்த புதிய பல விபரங்களுடன் சுவாரஸ்யமாக இருக்கிறது. மருத்துவர் ஜனகன் ஸ்ரீரஞ்சன் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் **'Catching up to COVID'** என்ற அறிவூட்டல் கட்டுரை குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் தர ஏற்படுத்தப்படும் தாமதங்களின் விளைவுகளை அலசியிருக்கிறது.

### ஊடக உலகம் குறித்த கட்டுரைகள்

மூத்த ஊடகவியலாளரும், இலங்கையின் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றியவருமான எஸ். ஜெகதீசன் 'டைம்' ஆங்கில இதழ் குறித்து 'கௌரவம் தரும் நேரம்' என்ற தலைப்பில் சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார். இன்று தமிழ் சமூகத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்தும் நவீன ஊடகங்கள் குறித்தும் இந்த மலரில் கட்டுரைகள் உள்ளன. சமூக ஊடகங்களின் வகிபாகத்தை உதயன் எஸ். பிள்ளை அலசியிருக்கிறார். 'மறையும் மை' என்ற தலைப்பில் இலங்கையிலிருந்து ஊடகர் பாரதி இராசநாயகம் இன்றைய டிஜிட்டல் யுகத்தில் இலங்கையிலும், இந்தியாவிலும் தமிழ் இதழ்கள் அடையும் நெருக்கடிகள் குறித்த பல்வேறு தகவல்களைத் தருகிறார். ஆஸ்திரேலியாவிலிருந்து கவல் கணன் எழுதியிருக்கும் கூகிள் எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரை செயற்கைத் அறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எழுத்தாளர்கள் இன்றைய காலத்தில் கட்டுரைகளை எழுதுவது குறித்துப் பேசுகிறது. இது தமிழில் இதுவரை அதிகம் பேச ஆரம்பிக்கப்படாத விடயமாகும்.

### அனுபவங்கள் வழி கட்டுரைகள்

வரலாறு என்பது தனிநபர் அனுபவங்களின் தொகுப்புகளாலேயே அமைகிறது என்ற காரணத்தால் கனடியத் தமிழ் வரலாற்றை தனிநபர்களின் சொந்த வாழ்க்கை அனுபவப் பகிர்வுகளூடாகக் காணும் முயற்சியையும் தமிழர் தகவல் ஆண்டு மலர்களில் காணலாம். அந்த வரிசையில் இந்த மலரில் பா. ஞானபண்டிதன் தந்திருக்கும் ஷஎனது முதற் கனடா - வானொலி அனுபவம்; என்ற கட்டுரை அமைகிறது. நிறைஞ்சனா சந்துரு கனடாவில் தனது ஆடற்கலை அனுபவத்தை கனடா கலைமன்றம்: பெருங்கனவின் நீள் பயணம்; என்ற கட்டுரை வழி தெரிவிக்கிறார். கனடிய பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் எழுதியிருக்கும் **"Some Realities as Women in Leadership"** என்ற கட்டுரை அவரது அனுபவங்களின் விளைவாக எழுதப்பட்டதாக கணிக்கப்பட வேண்டியது. ஆஸ்திரேலியாவிலிருந்து லெ.முருகபூபதி எழுதியிருக்கும் 'தமிழ் இலக்கிய பாலம் அமைப்போம்' என்ற சுவாரஸ்யமான பயணக்கட்டுரையும் ஒருவகை அனுபவப் பகிர்வாகக் கணிக்க முடிகிறது.

(14ம் பக்கம் ார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர்: ஐயங்கள், திரிபுகள், நிஜங்கள்!

கந்தையா அருந்தவபாலன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் தெரிவாகத் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டுமென்று அரசியல் தலைவர்கள் உட்பட சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து முன்வைத்துள்ள கருத்துத் தொடர்பாக பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் அதேவேளையில் மக்கள் மத்தியில் அது தொடர்பான புரிந்துணர்வும் ஆதரவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. மறுபுறத்தில் கொழும்பு மைய தமிழ் அரசியல் தலைமைகளும், தமிழ் வாக்குகளுக்காகக் காத்திருக்கும் சிங்களத் தலைவர்களும் இதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் எதிரான பரப்புரைகளிலும் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தலைவர்களான டக்ளஸ், பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன், வியாழேந்திரன் போன்றோர் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தை எதிர்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அங்கஜனைப் பொறுத்தமட்டில் அவரது கட்சியே கந்தறுந்த நிலையிலிருக்கும் போது கருத்தெதுவும் சொல்ல விரும்பமாட்டார் எனினும் நிச்சயமாக ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கமாட்டார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற தமது முடிவில் உறுதியாக இருப்பதுடன் பொது வேட்பாளர் தொடர்பான ஐயங்களையும் எழுப்பி வருகின்றனர். மாவை சேனாதிராஜா, சிறிதரன் உட்பட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு கிழக்குத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இதற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியிருப்பதுடன் கட்சியின் உத்தியோகபூர்வ முடிவுக்காக காத்திருக்கின்றனர். சாள்ஸ் நிர்மலநாதன் போன்ற ஒருசில தலைவர்கள் இன்னும் உறுதியான முடிவைத் தெரிவிக்காதிருக்கும் சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியினர் மட்டும் இதற்கெதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் சுமந்திரனின் தீவிர ஆதரவாளர் எனக் கருதப்படுவோர் சமூக வலைத் தளங்களில் எதிரான பரப்புரைகளில் அதிகளவில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கலாம்.

அரசியல் முன்னெடுப்புக்கள் பலவற்றுக்கு வெளிப்படையாகச் சொல்லப்படும் நோக்கங்களை விட வேறு மறைமுக நோக்கங்கள் அல்லது நிகழ்ச்சி நிரல்கள் இருக்கக்கூடும் என ஐயுறுவது இயல்பானது மட்டுமல்ல அவசியமானதும் கூட. அது அவ்விடயம் தொடர்பான தெளிவான பார்வையைப் பெறுவதற்கு உதவுவதுடன் உறுதியான முடிவையும் எடுக்க உதவும். இது தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முன்மொழிவுக்கும் பொருந்தும். ஆனால் அதுபற்றிய ஐயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தெளிவைப் பெறுவதை விடுத்து வெறும் ஊகங்களின் அடிப்படையில் தொடர்ந்து அதற்கு எதிரான கருத்துக்களைப் பரப்புரை செய்து வருவது ஆரோக்கியமாக அமையாது என்பதற்கு அப்பால் இவ்வாறு பரப்புரை செய்வோர்தான் வேறு மறைமுக நோக்கங்கள் அல்லது நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகிறார்கள் என்று கருதுவதற்கும் வழி வகுக்கும். அதேவேளை இவர்களினால் இவ்வாறு மேற்கொள்ளப்படும் தவறான பரப்புரைகளிலிருந்து மக்களை தெளிவுறச் செய்யவேண்டிய பொறுப்பு குறித்த அரசியல் கருத்தை முன்மொழிந்து செயற்படுவோர்க்கு மட்டுமன்றி சமூக அக்கறையுடைய அனைவர்க்கும் உள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக எழுப்பப்படும் ஐயங்களில் ஒன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியுமா என்பது. உண்மையில் இங்கு வேட்பாளர் என்பவர் ஒரு குறியீடு மட்டுமே. அதன் பின்னால் உள்ள கொள்கையும் கோரிக்கைகளுமே முக்கியமானவை. அதாவது தமிழ் மக்கள் தங்கள் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றுபட்ட சக்தியாக திரண்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம். இங்கு தமிழ்ப் பொது வேட்பாளருக்கு அளிக்கப்படும் வாக்குக்கள் அவருக்கானதல்ல. அவை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கானவை. அதனால்தான் இதனை தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைக்கான ஒரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பாக மாற்ற முடியும் எனக் கூறப்படுகிறது. இந்த நாட்டில் தன்னாட்சி உரிமை கொண்ட தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தீர்மானிப்பதற்காக ஒரு பொது வாக்கெடுப்பைக் கோரி நின்றாலும் அதனை சிறிலங்கா அரசோ அன்றி சர்வதேசமோ செய்யும் வாய்ப்பு அண்மிய எதிர்காலத்தில் கிடைக்கப்போவதில்லை. எனவே வரும் ஜனாதிபதித் தேர்தலை அதற்கான வாய்ப்பாக தமிழ் மக்கள் பயன்படுத்த முடியும் என்ற நோக்கமும் இதில் அடங்கியுள்ளது. இந்த வகையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவின் பின்னாலுள்ள நோக்கமே முக்கியம் பெறுவதால் பொருத்தமான ஒருவரைத் தெரிவது கடினமானதன்று. எனினும் அவ்வாறு தெரிவு செய்யப்படும் நபர் ஒரு கட்சி சார்ந்தவராகவோ, வருங்காலத்தில் தேர்தல்களில் போட்டியிடும் விருப்பம் இல்லாதவராகவோ இருப்பதுடன் சமூகத்தின் ஒரு பிரிவினரைப் பிரதிநிதித்தவப்படுத்துபவராகவும் இருக்கமாட்டார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இதனை எதிர்ப்போரின் இன்னொரு ஐயம் அல்லது குற்றச்சாட்டு இது ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சி என்பது. அத்துடன் நில்லாது இதன்பின்னால் இந்திய, அமெரிக்க சக்திகள் உள்ளன என்ற கருத்தும் அவர்களால் முன்வைக்கப்படுகிறது. இன்னுஞ்சிலர் இதற்கு மேல் சென்று கோடிகள் கைமாறியுள்ளன என்ற புரட்டையும் கிளப்புகின்றனர். இவ்வாறான கருத்துகள் எடுகோள்களின் அடிப்படையில் அமைந்தவையே அன்றி ஆதாரபூர்வமானவை அல்ல. முதலாவது எடுகோள் தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிக்க மாட்டார்கள்,சஜித்துக்குத்தான் வாக்களிப்பார்கள் என்பது. இரண்டாவது எடுகோள் இந்தியாவும் அமெரிக்காவும் ரணிலை ஜனாதிபதியாக்க விரும்புகிறார்கள் என்பது. சில தலைவர்கள் தாங்கள் ரணிலுடன் நேசமாக இருந்தால் மக்கள் ரணிலுக்கு ஆதரவளிப்பார்கள் என்றும், தாங்கள் ரணிலுடன் கோபம் போட்டால் மக்களும் ரணிலுக்கு ஆதரவளிக்கமாட்டார்கள் என்று சிறுபிள்ளைத்தனமாக நம்புவதே முதலாவது எடுகோள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சஜித்தை ஆதரித்தார்கள் என்பதால் இம்முறையும் ஆதரிப்பார்கள் என்று நம்புவது தவறு. அத்தேர்தலில் கோத்தாபயவுக்கு எதிராக வாக்களிக்க விரும்பினார்கள் என்பதே உண்மை. கோத்தாபயவும் ரணிலும் ஒன்றல்ல. தமிழ் மக்களுக்கு ரணிலைவிட சஜித் மேலானவருமல்ல. இந்தியா தனது கோடிப் புறத்தில் உள்ள ஒரு நாட்டில் தனக்கு ஆதரவான ஒருவர் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்று எண்ணுவது இயல்பு. அதேபோல அமெரிக்காவும் தனது உலக அரசியல், பொருளாதார ஒழுங்குக்கு ஆதரவாக இருக்கக் கூடியவர்களை நாடுகளின் தலைவராக கொண்டுவர விரும்புவதும் வழமை. இன்றைய நிலையில் இவ்விரு நாடுகளுக்கும் ஒப்பீட்டு ரீதியில் ரணில் கூடிய விருப்பத்துக்குரியவராக இருக்கக் கூடும். எனினும் ரணில் எப்போதும் மேற்குலகு சார்பானவராக இருப்பதால் அவர் தொடர்பாக இந்தியா எப்போதும் எச்சரிக்கையுடனே அணுகும் என்பதும் உண்மை. ஆனால் இலங்கையின் இன்றைய அரசியல், பொருளாதாரக் களநிலையில் இலங்கையில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் தமக்கேற்ற வகையில் கையாளக்கூடிய நிலையிலேயே இவ்விரு நாடுகளும் உள்ளன. ஜே.வி.பி தலைவர் அனுரகுமார ஜனாதிபதியாக வந்தாலும் கூட இதிலிருந்து உடனடியாக விலகிச் செல்வதற்கான வாய்ப்பு இருக்காது. எனவே தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனையின் பின்னால் இந்தியாவும் அமெரிக்காவும் இருக்க வேண்டிய தேவையில்லை. இவர்கள் கருதுவது போல இந்தியாவும் அமெரிக்காவும் ரணிலைக் கொண்டுவர விரும்பினால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கொல்லைப்புற அணுகுமுறை அந்நாடுகளுக்கு அவசியமில்லை. இன்று சஜித்துடன் நிற்கும் கூட்டாளிகளான தமிழ், முஸலிம் தலைவர்களை மட்டுமன்றி சிங்களத் தலைவர்களையும் நேரடியாகவே விலைக்கு வாங்கும் வல்லமை அந்நாடுகளுக்குண்டு. விலைபோகாத அரசியல் தலைவர்களென யாரும் இங்கில்லை.

இவ்வாறான ஐயங்களைப் பின்புலமாகக் கொண்டு இன்னொரு கேள்வியும் எழுப்பப் படுகிறது. சென்ற ஜனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வராதவர்கள் இப்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பதைத் தூக்கிப் பிடிப்பது ஏன்? என்பது. அத்துடன் நில்லாது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட குமார் பொன்னம்பலம், சிவஜிலிங்கம் போன்றோருக்கு ஏற்பட்ட நிலையே இம்முறையும் ஏற்படும் என்று ஆருடமும் கூறுகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் 2010 இலேயே கருக்கொள்ளத் தொடங்கியிருந்தாலும் இதுவரை அதுற்கு முழு உயிர் வடிவத்தைக் கொடுப்பதில் தயக்கம் காணப்பட்டே வந்துள்ளது. இறுதியாகத் தமிழ் மக்கள் பேரவையிலும் இது தொடர்பான முன்மொழிவு வந்தபோதும் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. இதற்குத் தமிழ்த் தலைவர்கள் அனைவருமே பொறுப்புக் கூறவேண்டும். அதனால் விட்ட தவறை தொடர்ந்து விட வேண்டும் என்பதில்லையே. விட்ட தவறைத் திருத்திக் கொள்வதுதானே அறிவார்ந்த செயல். மேலும் குமார் பொன்னம்பலமோ அன்றி சிவாஜிலிங்கமோ தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிடவில்லை. அவர்கள் தனிப்படவே தேர்தலில் போட்டியிட்டனர். தமிழ் அரசியல் தலைவர்களும் சமூகத்தலைவர்களும் ஒன்றிணைந்து ஒத்த முடிவொன்றை எடுப்பார்களேயானால் அவர்கள் பின்னால் மக்கள் செல்வார்கள் என்பதைக் கடந்த காலம் உணர்த்தி நிற்கிறது. எனவே அவர்களுக்கு ஏற்பட்ட நிலை இங்கும் ஏற்படும் என ஆரூடம் கூறுவது விடயங்களைச் சரியாக விளங்கிக் கொள்ளாமையின் வெளிப்பாடாகும்.

இது தொடர்பாக முன்வைக்கப்படும் இன்னொரு கேள்வி ஒரு சிலரின் முடிவு எவ்வாறு தமிழ் மக்களின் முடிவாக அமையும்? என்பது. முதலில் ஒருவரின் அல்லது ஒரு சிலரின் கருத்தாக ஒன்று உருவாகி பின்னர் மக்களின் கருத்தாகவும் நாடுகளின் கொள்கையாகவும் அது வலுப்பெற்றிருந்தை உலக வரலாற்றில் நாம் அதிகம் காணமுடியும். 1975 இல் 'தனிநாடு' என்ற எண்ணக்கரு அவ்வாறுதான் உருவாகி 1977இல் மக்கள் மயமானது. கிழக்கில் ஒருசிலரின் எண்ணமாக உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு தசாப்தங்களாக தமிழ்மக்களைக் கட்டி வைத்திருந்தது. ஆனால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவு ஐம்பதுக்கு மேற்பட்ட குடிசார் அமைப்புகள், தமிழ் அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், துறைசார் அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் என்போரின் கூட்டு முன்மொழிவாக அமைந்துள்ளது. உண்மையில் இது போன்ற ஒரு கூட்டு முன்மொழிவு இதற்கு முன் காணப்பட்டதில்லை. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களின் தீர்மானம் என்பது சம்பந்தன் சக சுமந்திரன் தீர்மானமாகத் தானே இருந்து வந்துள்ளது. அதனைச் சிறப்பென்று சிலாகித்தவர்கள் இதனை ஒருசிலரின் தீர்மானமெனக் கூறவதுதான் வேடிக்கையாக உள்ளது.

இது தொடர்பாக எச்சரிக்கையொன்றும் அவர்களால் முன்வைக்கப்படுகிறது. அதாவது தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது பௌத்த சிங்கள இனவாதத்தை தூண்டும் என்பது. இலங்கையில் குறித்த இனவாதம் மோசமாக இல்லை என்றும் இதன்மூலம்தான் இனவாதம் மோசமடையும் என்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தாவிடில் இன ஐக்கியம் தோன்றிவிடும் என்றும் இதன்மூலம் இவர்கள் கூற வருகிறார்கள். பௌத்த சிங்கள இனவாதம் அரச இயந்திரத்தின் துணையுடன் தமிழர் தாயகத்தையும் அங்கு வாழும் மக்களின் பண்பாட்டு மரபுகளையும் கபளீகரம் செய்து இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டுவருவது இவர்களின் கண்ணில் தெரிவதில்லைப் போலும். இலங்கையில் இன ஐக்கியம் உருவாக வேண்டுமெனில் முதலில் தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு ஒரு திரட்சியாக மாற வேண்டும். அதற்கான ஒரு வாய்ப்பாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு அமையுமென நம்பலாம்.

இதிலுள்ள அகமுரண்பாடு என்னவெனில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்போர் எவரும் அதற்குப் பதிலான தமது முன்மொழிவு எதனையும் கூறாமலிருப்பதுதான். அவர்கள் குறித்த ஒரு சிங்கள வேட்பாளருக்கு தமிழ் வாக்குகளை பெற்றுக் கொடுக்க விருப்பம் கொண்டிருந்தாலும் மக்களிடத்தே அதனைக் கொண்டு செல்வதற்கான நியாயப்பாடுகள் அவர்களிடத்தே இல்லாமலுள்ளன. ஏனெனில் இத்தலைவர்களின் வார்த்தைகளை நம்பி வெற்றுக் காசோலையாகத் தமது வாக்குகளை சிங்களத் தலைவர்களுக்கு வழங்கித் தொடர்ந்து ஏமாறத் தமிழ் மக்கள் தயாராகவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளை இவர்கள் யாருக்குப் பெற்றுக் கொடுக்க விரும்புகிறார்களோ அவர், தான் ஜனாதிபதியானால் தரக்கூடிய, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வைக்குறித்து மூன்றாம் தரப்பு முன்னிலையில் தமிழ்த் தரப்புடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்யத் தயாரெனில் அவருக்கு வாக்களிக்க தமிழ் மக்களும் தயாராகவே உள்ளனர். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துகளை முன்வைப்போர் அதனை விடுத்து மேற்கூறியவாறான உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கு தாங்கள் விரும்பும் வேட்பாளரைத் தூண்டவேண்டும். ஆனால் அவ்வாறு செய்தால் சிங்கள வாக்குகள் கிடைக்காது என இரகசியம் பேசும் சிங்களத் தலவர்களால் ஒருபோதும் தமிழர்களின் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும். ●

> **பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்போர் எவரும் அதற்குப் பதிலான தமது முன்மொழிவு எதனையும் கூறாமலிருப்பதுதான். அவர்கள் குறித்த ஒரு சிங்கள வேட்பாளருக்கு தமிழ் வாக்குகளை பெற்றுக் கொடுக்க விருப்பம் கொண்டிருந்தாலும் மக்களிடத்தே அதனைக் கொண்டு செல்வதற்கான நியாயப்பாடுகள் அவர்களிடத்தே இல்லாமலுள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா, ரொறன்ரோவில் கலைஞர்களுக்கு மதிப்பளிப்பு

**குரு அரவிந்தன்**





முத்தமிழ் என்று அழைக்கப்படுகின்ற இயல், இசை, நாடக வடிவங்களைக் கட்டிக் காப்பதில் புலம் பெயர்ந்து கனடா வந்த ஈழத்தமிழர்கள், வேலைப் பளுவுக்கு மத்தியிலும் மிகவும் ஆர்வத்தோடு அத்துறையில் ஈடுபட்டார்கள். தொடக்கத்தில் பொருளாதார ரீதியாகத் தங்களைத் தாங்களே நிலை நிறுத்திக் கொள்வதில் கஸ்டங்களை அனுபவித்தாலும், தங்களுடன் ஒன்றாக இணைந்த கலை வடிவங்களைப் புலம் பெயர்ந்த மண்ணில் வெளிக் கொண்டுவருவதில் அவர்கள் தயக்கம் காட்டவில்லை.

அந்த வகையில் தமிழரின் கலை வடிவங்களை ஆரம்பத்தில் முன்னெடுத்துச் சென்றவர்களில் நடிகர், நாடக நெறியாளர், படத்தயாளிப்பாளர் என்று பல வடிவங்களில் இனங்காணப்பட்டவர்களில் திரு. சிறிமுருகன் அவர்களும் கலகலப்பு தீசன் அவர்களும் அடங்குவார்கள். இவர்கள் இருவரின் 50 ஆண்டுகால கலைச் சேவையைப் பாராட்டி, வாழும்போதே கௌரவிக்க வேண்டும் என்ற பெருவிருப்போடு இந்த நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது. இதேபோல கலைஞர்களை வாழும்போதே கௌரவிக்கும் நிகழ்வில் முன்பு நாடக, திரைப்பட நடிகர் கே. எஸ். பாலச்சந்திரனுக்கு விழா எடுத்தபோது அந்த நிகழ்விற்குத் தலைமை தாங்கியிருந்தேன். தொடர்ந்து செந்தில்நாதன், கமல்பாரதிக்கும் அவர்களின் கலைச் சேவைக்காகக் கனடாவில் சென்ற மாதம் வெள்ளிவிழா கொண்டாடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இணுவில் என்ற ஊரைச் சேர்ந்த, 'கலகலப்பு' என்ற கையெழுத்து இதழை நடத்திய தீசன்




அவர்கள் நகைச்சுவை நாடகம், திரைப்படம் போன்றவற்றின் மூலம் 'கலகலப்பு தீசன்' என்று கனடாவில் நன்கு அறிமுகமானவர். 'கலகலப்பு' என்ற பெயரில் திரைப்படம் ஒன்றையும் தயாரித்திருந்தார். கரவெட்டியைச் சேர்ந்த சிறிமுருகன் நடிப்பு, நாடகம், ஒப்பனை, திரைப்படம் என்று பல துறைகளில் கால் பதித்தவர். இவர்கள் இருவரையும் முதன் முதலாக கனடாவில் மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி வீட்டில் தான் சந்தித்தேன். அன்று தொடங்கிய நட்பு, எழுத்து, நாடகத்துறையில் இருந்த என்னைத் திரைப்படத் துறைக்குள் உள்வாங்கியது. சிறிமுருகனின் 'சுகம்சுகமே", "சிவரஞ்சனி" மற்றும் 'வேலி" போன்ற திரைப்படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதும் வாய்ப்பை அந்த நட்பு ஏற்படுத்தித் தந்தது. ஜனகன் பிச்ஸேசாரின் சிறந்த திரைக்கதை வசனத்திற்கான விருதைச் 'சுகம் சுகமே' திரைப்படம் 2007 ஆம் ஆண்டு எனக்குப் பெற்றுத்தந்தது. இதன் தொடர்ச்சியாகத்தான் தமிழ்நாட்டின் கலைஞர் தொலைக்காட்சிக் குறும்படத்துறை என்னை உள்வாங்கியது.

இந்தக் கலைஞர்களைப் போலவே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட சிலரை, வாழ்நாள் சாதனையாளர்களாகக் கனடா எழுத்தாளர் இணையத்தின் மூலம் சமீபத்தில் கௌரவித்திருந்தோம். இயல், இசை, நாடகம் போன்ற துறைகளில் நேர்மையாக ஈடுபடுபவர்கள் பணத்தையோ அல்லது பதவியையோ எதிர்பார்த்துச் செய்வதில்லை, அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தங்கள் திறமைக்கு வாசகர்கள், ரசிகர்கள், நேயர்களிடம் இருந்து ஒரு பாராட்டைத்தான். அந்த வகையில் இங்குள்ள எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் அவர்களின் திறமையைப் போற்றி, வாழும்போதே அவர்களை மதிப்போம், இது போன்று அவர்களையும் கௌரவித்து மகிழ்வோம்!

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## வியுக்தியார் பதில்கள்

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** : நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள பொருளாதார கொள்கை மாற்றமடைந்தால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் எதற்காக இப்படியொரு எச்சரிக்கையை விடுக்கிறார் என்பது தெரிந்ததுதானே. தற்போதைய நடைமுறையை சஜித் பிரேமதாசாவும், அனுரகுமார திசநாக்காவும் ஏற்றுக்கொள்ளவில்லையே. அப்படியெனில் அவர் மறைமுகமாக ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு வாக்களிக்கச் சொல்கிறாரா அல்லது ஜனாதிபதி தேர்தலே வேண்டாம் என்கிறாரா என்பதுதான் தெரியவில்லை.

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** :இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இரட்டைப்பிரஜா உரிமை உடையவர் என்பது பல காலமாகவே பேசப்பட்டுவந்த விடயம். ஆனால் அவரை பதவி நீக்கம் செய்வதற்கு எதற்காக இத்தனை வருடங்களை கடத்தினார்கள். அவர் கொஞ்சக் காலமாவது பதவியில் தொடரவேண்டும் என்றுதானே?

**வியுக்தியார்:** நமது நாட்டுச் சட்டங்கள் எல்லாமே இப்படித்தான். ஏதாவது ஒரு இடத்திலாவது ஓட்டை இருக்கும். இரட்டைக்குடியுரிமை உள்ளவர்கள்தான் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறமுடியாது என்று அரசியலமைப்பு கூறுகின்றது. ஆனால் பிரிட்டனின் பிரஜையான டயானா கமகே, இரட்டைப்பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்து இரட்டைப்பிரஜை ஆகினாரா என்பது கூட தெரியவில்லை. இலங்கைப் பிரஜை ஒருவர் வெளிநாடு ஒன்றில் பிரஜா உரிமையைப் பெறுகின்ற போது, அவரது இலங்கைக் குடியுரிமை இரத்தாகிவிடும். ஆனால் அவர் தான் பிரிட்டன் குடியுரிமை பெற்றுவிட்டேன் என்பதைச் சொல்லாமல் இலங்கை வருகின்ற போது தேசிய அடையாள அட்டையையும் புதுப்பித்து, இலங்கை பாஸ்போட்டையும் புதிதாக எடுத்து வைத்திருந்தால், அவர் இந்த ஆவணங்களுடன் இலங்கைப்பிரஜைபோலவே நடமாடலாம். எல்லாவற்றையும் செய்யலாம். அப்படி இல்லாமல் தான் பிரிட்டன் பிரஜையாகி விட்டேன் என்பதை அறிவித்து தனக்கு இரட்டைப்பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கலாம். அப்படி விண்ணப்பித்தால்தானே அதுபற்றிய தாஸ்தாவேஜுகள் குடிவரவு திணைக்களத்தில் இருக்கும். அப்படி இருந்திருந்தால், இலகுவாக அவர் இரட்டைப்பிரஜை என்பதை கண்டுபிடித்திருப்பார்கள். அதுவல்ல முக்கியமானது, அப்படி இரட்டைப்பிரஜா உரிமை இருப்பவர் எம்.பி.யாக இருக்கமுடியாது என்பதுதான் சட்டமே தவிர, அப்படி இருந்தால் அது குற்றம் என்றோ அதற்கு தண்டனை இருக்கிறது என்றோ சொல்லப்படவில்லையே. இதுதான் நமது நாட்டு சட்டத்தின் 'மகிமை".

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** சிறிலங்காவில் உள்நாட்டுப் போர்முடிந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தமிழ் இளைஞர் யுவதிகளை கடத்திச் சென்று காணாமல் ஆக்குவதும், அவர்களை பாரதூரமான உடல் மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்குவதும் தொடர்ந்தும் இடம்பெறுவதாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்டத்தின் புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதே. இது சரியானதா?

**வியுக்தியார்:** அவர் பணத்தை ஒதுக்கினாலும், எப்படியான வீடுகளை அமைப்பது என்பதில் நம்மவர்கள் ஆளாளுக்கு வெவ்வேறு யோசனைகளைச் சொல்லி எந்த ஒரு வீடும் கட்டப்படுவதை தடுத்துவிடுவார்கள் என்பது அவருக்குத் தெரிந்ததுதானே. அதுதான் அவர் அப்படி தாராளமாக ஒதுக்கியிருக்கிறாரோ தெரியவில்லை. அது சரி, கடந்த ஆண்டு அவர் தனது பட்ஜட்டில் உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்துவதற்காகவும் நிதி ஒதுக்கியிருந்தாரே. ஆனால் தேர்தல் நடாத்த பணம் இல்லை என்று அதனை நடத்தாமல் விட்டது ஞாபகம் இல்லையா உங்களுக்கு?. அதுபோலத்தான் வடக்கு கிழக்கு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கினாரோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

**எஸ். விஜயரூபன்,**
**கரவெட்டி மத்தி, கரவெட்டி,**

**கேள்வி:** உள்ளகப் பொறிமுறை ஊடாக எமது மக்களின் பிரச்னைகளுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் நீதி கிடைக்காது. இதற்கு கடந்த 15 வருட காலமே சான்றாக அமைகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் சொன்னால் நிச்சயம் அது சரியாகத்தான் இருக்கும். அவர் சொல்கின்ற இந்த கடந்த 15 வருடங்களில் 5 வருடங்கள் அவருடைய ஆதரவுடன் நல்லாட்சி அரசுதானே ஆட்சியில் இருந்தது. அந்தக் காலத்தில் சர்வதேச விசாரணையே நடந்து முடிந்து விட்டது என்று கூறியவரல்லவா? அவர் இப்போதாவது இப்படி உண்மையைச் சொல்வதற்காக சந்தேசப்படுவோம்.

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டாலும் அத்தனை வேட்பாளர்களையும் எதிர்கொள்ள தான் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** இது என்ன குத்துச்சண்டைப்போட்டியா என்ன? எத்தனை பேர் போட்டியிட்டாலும் அவர் என்ன எல்லாரோடும் மல்யுத்தத்திற்கு போகப்போகிறாரா என்ன? அவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து போட்டியிடப்போவதில்லை என்பது அவருக்குத் தெரியாததா என்ன? இதுபோன்ற சவால்களை விடுப்பது எதிர்காலத்தில் நாட்டின் தலைவராக வர விரும்புகின்ற ஒருவருக்கு அழகானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொதுவேட்பாளர் முயற்சி வரலாற்றில் பதிவாகுமா?



யதீந்திரா

தமிழ் பொதுவேட்பாளர் முயற்சி வெற்றிபெறுமா? கேள்விகள், சந்தேகங்கள், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் முயற்சிகள் தொடர்கின்றன. தமிழ் மக்கள் மத்தியில் ஒருபொதுவேட்பாளரைநிறுத்தி,அவரை நோக்கி தமிழ் மக்களின் வாக்குகளைதிரட்ட முடியாதா? ஒருதேசிய இனத்தின் பெயரால் இதனை செய்யமுடியாவிட்டால் பின்னர் எதற்கு இத்தனை கட்சிகள்? இவ்வாறான கேள்விகளுடன், நம்பிக்கையுள்ளவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

"மக்கள் மனு" - சிவில் சமூகம் ஆரம்பித்த முயற்சி, பின்னர் தமிழ் சிவில் சமூக அமைப்புக்களால் முன்னெடுக்கப்படுகின்றது. அதேபோன்று, அரசியல் கட்சிகள் மத்தியில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்த நிலைப்பாட்டை ஆரம்பத்திலிருந்தே உறுதியாக ஆதரித்து வருகிறார். பின்னர் ஐந்து கட்சிகளின் கூட்டணியான, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி கொள்கையடிப்படையில் தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாக அறிவித்தது.

இலங்கை தமிழரசுகட்சி அதன் இறுதி முடிவை அறிவிப்பதற்கு இரண்டு வாரங்கள் அவகாசம் கோரியிருக்கின்றது. "மக்கள் மனு" சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் சந்திப்பின் போதே, தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தவிடயத்தை தெரிவித்திருந்தார். தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பான கூட்டமொன்றில், மாவை சேனாதிராசா முதல் தடவையாக பங்குகொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் தமிழரசுகட்சியின் தலைவராக வந்திருக்கவேண்டிய சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழரசுகட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றனர். பொதுவெளிகளில் ஆதரித்து பேசிவருகின்றனர்.

அதேவேளை இந்த நிலைப்பாட்டை எதிர்க்கும் ஒரு சிறியதரப்பும் இருக்கின்றது. அரசியல்வாதிகள் தொடக்கம் சில பத்திரிகையாளர்கள் வரையில் அந்த சிறிய குழுவில் இடம்பெறுகின்றனர். ஆனால் அவ்வாறானவர்கள் முன்வைக்கும் காரணங்கள் தர்க்கரீதியில் மிகவும் பலவீனமானவை. உண்மையில் எதிர்ப்பாளர்களுக்கு தர்க்கரீதியில் பேசவே தெரியவில்லை. மேலும், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள் எவருமே இதுவரையில் தங்களின் மாற்று நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அதேவேளை, தமிழ் பொதுவேட்பாளர் தேவையில்லை என்றால், தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிமட்டுமே, அவர்களின் வழமையான பகிஸ்கரிப்பு கோரிக்கையை முன்வைத்து வருகின்றது. ஒருகுறிப்பிட்டளவான மக்கள் பொதுவாகவே வாக்களிப்பதில்லை. அவ்வாறு வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அதனை பகிஸ்கரிப்பாக காண்பிக்கலாமென்று காங்கிரஸ் கருதுகின்றது. அவர்கள் வழமைபோல் தங்களை புனிதர்களாக காண்பிப்பதற்காக எவற்றையெல்லாம் கூறுவார்களோ, அவற்றையே இப்போதும் உச்சரித்து வருகின்றனர். அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பிருப்பதாக தெரியவில்லை. ஒருவேளை திருந்தினால், அவர்களையும் இந்த முயற்சிக்குள் உள்வாங்கமுடியும்.

தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டைஎதிர்க்கும் சிறிய தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் இவைகள்தான்: இது மக்களின் முடிவல்ல மாறாக சிவில் சமூக அமைப்புக்கள் என்று தங்களை அழைத்துக் கொள்வோர் சிலரின் முடிவு, இதற்குபின்னால் அன்னியசக்திகள் உண்டு, இது ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்வதற்கான ஒருதிரைமறைவு வேலைத்திட்டம் - இப்படியான கதைகளையே சிலர் கூற முற்படுகின்றனர்.

இவ்வாறான கதைகள் எவையுமே, ஒரு தமிழ் பொது வேட்பாளரின் தேவையை தர்க்கரீதியில் நிராகரிப்பதற்கான பலமான வாதங்கள் அல்ல. மக்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பது என்றால் என்ன? லட்சக்கணக்கான மக்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதா? ஜனநாயகத்தில் மக்களுடன் கலந்துரையாடுவது என்பது, மக்களை பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் மத்தியில் இயங்கும் சிவில் சமூக குழுக்கள் ஆகியோருடன் கலந்துரையாடி, ஒருதீர்மானத்தை எட்டுவதுதானே! அவ்வாறான சந்தர்ப்பத்தில் கூட பெரும்பான்மையானவர்கள் என்னுமடிப்படையிலேயே விடயங்கள் ஆராயப்படும். இதுதான் ஜனநாயக நடைமுறை. இந்த நடைமுறையின்படி தான் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் கையாளப்பட்டது. கையாளப்படுகின்றது.

கடந்த பதினைந்து வருடங்களாக சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் தனிநபர் தீர்மானங்களில்தான் அனைத்து அரசியல் முடிவுகளும் எடுக்கப்பட்டன. இப்போது மக்கள் பற்றி அக்கறைப்படுவதாக கூறிக் கொள்வோர் அனைவருமே, அப்போது தங்களின் சுயநலனுக்காக, சம்பந்தனின் தன்னிச்சையான முடிவுகளுக்கு விளக்கவுரைகள் எழுதிக் கொண்டிருந்தவர்கள் தான். ஏக்கிய ராஜ்ஜவிற்குள், சமஸ்டி ஒளிந்திருப்பதாக கூறியபோது, மக்களின் கருத்துக்கள் தொடர்பில் எவரும் பேசவில்லை. வரமுடியாத அரசியல் யாப்பு தொடர்பில் வீணாகபேசிக் காலத்தை விரயம் செய்து கொண்டிருந்தபோது, இன்று மக்கள் தொடர்பில் பேசுபவர்கள் அப்போது எங்கிருந்தனர்? அன்று சம்பந்தனின் தீர்மானங்களுக்காக, மக்களின் வாழ்வை நாசமாக்கியவர்கள் இப்போது மக்கள் பற்றி கவலைப்படுவதாக கூறுவது வேடிக்கையானது.





அடுத்தது இவ்வாறு கேட்பவர்களுமுண்டு - அதாவது, மக்கள் வாக்களிக்காதுவிட்டால் என்னசெய்வது? இவ்வாறான கேள்வி சில அரசியல்வாதிகள் மத்தியிலும் உண்டு. அரசியல் தலைமைகள் வைத்திருக்கும் நிலைப்பாட்டை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்னும் சந்தேகம் எழுந்தால் - உண்மையில் அதுமக்கள் தொடர்பான பிரச்சினையில்லை, மாறாக - அரசியல்வாதிகள் வைத்திருக்கும் நிலைப்பாடுகள் தொடர்பான பிரச்சினையாகும். தாங்கள் வைத்திருக்கும் அரசியல் நிலைப்பாடுகளை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றால், பின்னர் எதற்காக அந்த நிலைப்பாடுகளை பாதுகாக்கவேண்டும்?

அடுத்தது, இதற்குபின்னால் யாரோ இருப்பதான கதைகள். இவ்வாறான கதைகள் தமிழ் தேசிய அரசியல் பரப்பிற்கு புதியவையல்ல. இது பற்றிமுன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியிருக்கின்றேன். இது ஒரு அரசியல் நோய். இவ்வாறான நோய்க்கு மருந்திடுவது மிகவும் கடினமானது. இப்படியான அரசியல் தொற்றுநோயை பரப்பும் ஒரு கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்கும். அந்தக் கூட்டம் அல்லது தனிநபர்கள் பல்வேறு தரப்புக்களின் முகவர்களாக இருக்கக் கூடும். அவர்கள் நமக்கு அருகில் நண்பர்களாகவும் இருக்கலாம். தமிழ் மக்களின் அரசியலை முன்நோக்கி நகர்த்துவதற்கான, கூட்டுமுயற்சிகள் வெளித்தெரியும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், இவ்வாறான நோய் பரப்பும் கூட்டம் களமிறங்குவதுண்டு. அவ்வாறானவர்களே, தமிழ் பொதுவேட்பாளர் விடயத்திற்கு பின்னால் யாரோ இருப்பதான கதைகளை காவித்திரிபவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் சிவில் சமூக தளங்களிலும் இருக்கலாம். இதனை சாதாரணமாக கடந்து செல்வதுதான் இந்த நோயை எதிர்கொள்ளுவதற்கான ஒரேயொரு மருந்தாகும்.

செயலில் உறுதியுடன் பயணிக்கும் போது, எதிர்ப்புக்கள் காணாமல் போய்விடும். தமிழ் பொதுவேட்பாளர் முயற்சிக்கான தடைகள் உண்மையில் வெளியில் இல்லை - அது உள்ளுக்குள்தான் இருக்கின்றது. அதிலும் குறிப்பாக இந்தநிலைப்பாட்டை கொள்கை நிலையில் ஆதரிப்பவர்களின் உறுதியின்மையே இதற்கான பிரதானதடையாகும். அதாவது, தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தை அரசியல் கட்சிகளும் சிவில் சமூகங்களும் ஒன்றிணைந்து முன்னெடுப்பது தொடர்பிலேயே தற்போது உரையாடப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த உரையாடல் அடுத்த கட்டத்தை நோக்கிநகரவில்லை.

ஐந்துகட்சிகளின் கூட்டணியான, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொண்டாலும் கூட, இலங்கை தமிழரசு கட்சியின் அறிவிப்பிற்காக காத்திருக்கவேண்டும் என்னும் கருத்தும் சில கட்சிகளிடம் உண்டு. இதன் காரணமாகவே விடயங்கள் வேகமாக நகரவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீன குழு என்னும் பெயரில், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தமுயற்சி ஒப்பீட்டடிப்படையில் மிகவும் பலவீனமான முயற்சி.

தமிழ் மக்கள் பேரவை தன்னிச்சையாக செயற்பட்டதே அதற்கான பிரதான காரணம். அப்போது தமிழ் மக்கள் பேரவையின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராக வலம்0புரி பத்திரிகையின் ஆசிரியர் விஜயசுந்தரமும் இருந்தார். தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் தொடக்கம், அதன் தீர்மானங்கள் எவற்றிலும் (சிலர் கூறுவது போன்ற) மக்கள் பங்குபற்றல் இருந்திருக்கவில்லை. அதன் ஒரேயொருபலமாக, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மட்டுமே இருந்தார். ஆனால் அன்று தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்தவர்கள், இன்று எதிர்க்க முற்படுவதுதான் ஆச்சரியமானது.

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் இலகுவான வெற்றியைபெறலாம். கொள்கை நிலைப்பட்டு ஆதரிக்கும் அனைத்து கட்சிகளும் இணைந்து இதனை முன்னெடுத்தால், இது ஒரு எழுச்சியாக மக்களைபற்றிக்கொள்ளும். சிவில் சமூக அமைப்புக்களும் இந்த முயற்சியோடு இணைந்துநிற்கும் போது அவ்வாறானதொரு எழுச்சி இலகுவாகும்.

தமிழரசுகட்சி இணைந்தால் அது வரவேற்கத்தக்கது, ஒருவேளை, கட்சியின் உள்ளக நெருக்கடிகளால், அது முடியாமல் போகுமானால், ஏனைய கட்சிகள் இந்த முயற்சியை முன்னெடுக்கலாம். அவ்வாறான சூழலில் தமிழரசுகட்சி இந்த முயற்சியை எதிர்க்கப் போவதில்லை. கட்சி ரீதியாக இல்லாவிட்டாலும் கூட, தனிநபர்களாக அவர்கள் அனைவரும் இந்த முயற்சியோடு தங்களை இணைத்துக் கொள்ளவே முயற்சிப்பர். இது மிகவும் சாதகமானசூழலாகும்.

கடந்த பதினைந்து வருடகால அரசியல் நகர்வுகளில் தமிழ் கட்சிகளால் ஒன்றுபட்டுச் செயற்பட முடியவில்லை. இந்த முயற்சியில் சிவில் சமூக அமைப்புக்கள் படுமோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றன. ஆரம்பத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒருகட்சியாக பதிவுசெய்யவேண்டும் என்னும் நிலைப்பாட்டில் ஒருசில தனிநபர்களும் சிவில் சமூகபிரதிநிதிகளும் பலவாறான முயற்சிகளை மேற்கொண்டனர். அதுவெற்றிபெறவில்லை. காரணம், சிவில் சமூகங்களின் தலையீடுகளை சம்பந்தன் பொருட்படுத்தவில்லை.

பின்னர், ஒருமாற்றுத் தலைமையை உருவாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். அந்த முயற்சியும் தோல்வியிலேயே முடிந்தது. காரணம், சிவில் சமூக அமைப்புக்களின் தலையீடுகளை கட்சிகள் பொருட்படுத்தவில்லை. இந்தபின்புலத்தில் நோக்கினால், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியிலும், சிவில் சமூக அமைப்புக்களால் ஒருகட்டத்திற்கு மேல் கட்சிகளை நிர்பந்திக்க முடியாது. அதற்கான ஆற்றலுடன் சிவில் சமூக அமைப்புக்கள் இல்லை. எனவே தமிழ் பொது வேட்பாளர் முயற்சிவெற்றிபெற வேண்டுமாயின், அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் பரஸ்பர விட்டுக் கொடுப்புக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே, முயற்சி வெற்றியை எட்டும். இல்லாவிட்டால் இந்த முயற்சியிலும் சிவில் சமூக குழுக்கள் மோசமான தோல்வியையே சந்திக்கும்.

கட்சிகள் என்னதான் கொள்கையை உயர்திப் பிடிப்பதாக கூறிக்கொண்டாலும் கூட, அவர்களுக்கு தேர்தல் நலன்கள் பிரதானமானது. ஏனெனில் தேர்தலில் தோல்வியுற்றால், அதன் பின்னர் அவர்களால் மக்கள் மத்தியில் அதிகாரமுள்ளவர்களாக இயங்க முடியாது. எனவே கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இடமிருக்கவேண்டுமாயின், அவர்களுக்கு தேர்தல் வெற்றி கட்டாயமானது. தேர்தல் நலன்களை முற்றிலுமாக புறம்தள்ளி எந்தவொரு கட்சியும் முடிவுகளை எடுக்காது. இந்த யதார்த்தத்தை சிவில் சமூக அமைப்புக்கள் புரிந்து கொள்ளவேண்டும். வெறுமனே தங்களின் தீர்மானங்களிலிருந்து கட்சிகளை அணுகினால், விடயங்களை முன்நோக்கி கொண்டு செல்ல முடியாமல் போகும்.

தமிழ் பொது வேட்பாளர் முயற்சி சிலர் விரும்பவது போன்று, தோல்வியுற்றால் என்னநடக்கும்? ஒருஅரிய வாய்ப்பு கைநழுவிப் போகும். பின்னர் ஏன் முடியவில்லை என்பது தொடர்பில், சிலகட்டுரைகளை எழுதி, நம் இயலாமையை ஆற்றிக்கொள்ளலாம். இந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர், ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான அரியவாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகமே! இந்தக் கட்டுரையாளரை பொறுத்தவரையில் அதற்கான வாய்ப்பு இனியில்லை. எனவே இந்தமுயற்சியை எப்படியாவது ஒப்பேற்றியாக வேண்டும். அதற்காக எவ்வாறான விட்டுக் கொடுப்புக்களையும் மேற்கொள்ளலாம்.

வரக் கூடிய அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து, ஒரு தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாமல் போகுமானால், தமிழ் மக்களால் ஒற்றுமையாக எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்க முடியாது என்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகும். அதேவேளை, சிவில் சமூகம் என்னும் நிலையில், எதிர்காலத்தில் எந்தவொரு அரசியல் விடயங்கள் தொடர்பிலும் பேசமுடியாமலும் போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழர் தகவல் சஞ்சிகையின்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கனடா வந்து குடியுரிமை பெற்ற பின்னர், ஒரு கனடியராக வேறு நாடுகளுக்குச் சென்று தமிழ்க் கனடியர்கள் பலரும் பணிபுரிந்து வருகிறார்கள். அந்த அனுவங்களைப் பதிவாக்கும் முயற்சியும் இந்த இதழில் நடந்திருக்கிறது. 'தொலைக்காட்சி அனுபவங்கள் - சிங்கப்பூரில் கற்றதும் பெற்றதும்' என்ற கனடா மூர்த்தியின் கட்டுரை இந்த வகையிலானது.

**தாயகத்தின் வரலாற்றைத் தரும் கட்டுரைகள்**

தாயகத்தின் வரலாற்றைத் தொகுக்கும் முயற்சியாக, 'அரியாலை சுதேசியத் திருநாள்' என்ற ப. ஸ்ரீஸ்கந்தனின் கட்டுரையும், குயின்ரஸ் துரைசிங்கம் எழுதியிருக்கும் 'திருமறைக்கலாமன்றம்' கட்டுரையும் கவனத்தில் நிற்கின்றன. லண்டன் என் செல்வராஜா எழுதியிருக்கும் 'நினைவுகளே எங்கள் கேடயம்' என்ற கட்டுரை தனித்துத் தெரிகிறது. இக் கட்டுரையானது 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் அசம்பாவிதங்கள் குறித்த பலவிபரங்களை ஆதாரங்களுடன் விபரிக்கிறது.

**அறிவியல் கட்டுரைகள்.**

கனி விமலநாதன் எழுதியிருக்கும் 'வானியலில் ஓரைகளும் நாள்மீன்களும்' என்ற கட்டுரை விண்வெளி அறிவியலில் நாம் கண்ட பழமையையும், கண்டுவரும் புதுமையையும் இணைத்து மிகச் சுவாரஸ்யமாக, நமக்குப் பழக்கத்தில் வராத பல தமிழ் கலைச் சொற்களை உபயோகித்து எழுதப்பட்டிருக்கின்றது. இன்னொரு விண்வெளி அறிவியல் கட்டுரையாக, சிவ ஞானநாயகன் சந்திரனின் தென்துருவத்தில் சந்திரயான் 3 செய்திருக்கும் சாதனையை விளக்கமாகத் தொகுத்துத் தந்திருக்கின்றார். ஆஸ்திரேலியாவிலிருந்து ஆசி. கந்தராஜா, பழங்களைப் பழுக்கவைக்க கல்சியம் கார்பைடு கற்கள் பயன்படுத்தப்படுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எழுதியிருக்கிறார்.

**கலை, பண்பாடு குறித்த கட்டுரைகள்**

'தமிழர் வாழ்வோடு இணைந்த கலைவடிவங்கள்' என்ற தலைப்பில் குரு அரவிந்தன் எழுதியிருக்கும் கட்டுரையும், ஷகாற்று வடிக்கும் சிற்பங்கள்; என ஜேர்மனியிலிருந்து வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் எழுதியிருப்பதும், 'தமிழ்ப் புத்தாண்டும் தைப்பொங்கல் பண்டிகையும்' என்ற தலைப்பில் பாடும்மீன் சு. சிறீகந்தராசா அவுஸ்த்ரேலியாவிலிருந்து எழுதியிருக்கும் விடயங்களும், நியூசிலாந்தில் எழுத்தாளர் மாத்தளை சோமு எழுதியிருக்கும் 'நியூசிலாந்தில் புலம் பெயர்ந்த தமிழ் மணி' கட்டுரையும் தமிழர்களின் சிறப்பைச் சொல்கின் றன.

'FIFA உலகக் கோப்பைப் போட்டி' என்ற தலைப்பில் எஸ். கணேசுஷ் தந்திருக்கும் உதைபந்தாட்டம் குறித்த கட்டுரையும், 'மந்திர ஆலோசனை' என்ற தலைப்பில் இலங்கையில் கவனிக்கப்படும் அரசியல் மாற்றங்கள் குறித்து சிவதாசன் எழுதியுள்ள கட்டுரையும் தனித்துவத்தோடு தெரிகின்றன.

**விருதாளர்கள் குறித்த சிறப்புப் பகுதி**

இந்த ஆண்டுக்கான தமிழர் தகவல் விருதுகளைப் பெற்ற ஏழு சாதனையாளர்கள் குறித்த சுருக்கமான தகவல்கள் ஒரு தனிப்பகுதியாகத் தரப்பட்டிருக்கிறது. நோர்வே நாட்டில் வாழ்பவரும் தாயகத்தில் பல்வேறு அறிவியல் திட்டங்களை செயல்படுத்திவருபவருமான பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை இந்த ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றிருக்கிறார். அவர் குறித்தும், மொழியில் புலமையாளர் விருது பெற்ற கலாநிதி மைதிலி தயாநிதி அவர்கள் குறித்தும், துணிவே துணை என ஷசமூக சாம்பியன்; விருதினைப் பெற்ற கனடிய வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அஜித் சபாரத்தினம் அவர்கள் குறித்தும், வாத்திய இசைகளின் வல்லுனராக விருதளிக்கப்பட்டிருக்கும் திரு, விஜயகுமரன் திருநாவுக்கரசு அவர்கள் குறித்தும், ஆடற்கலைக்கு அணிசேர் ஆசிரியமணியாக அடையாளம் காணப்பட்டிருக்கும் ஸ்ரீமதி லலிதாஞ்சனா கதிர்காமன் அவர்கள் குறித்தும், இளைய தலைமுறையின் நம்பிக்கை நட்சத்திர விருதை பெற்றிருக்கும் ஹரிசன் ரவிசங்கர் அவர்கள் குறித்தும், நவீன அறிவியல் தொழில்துறை முனைவராக சிறப்பிக்கப்பட்டிருக்கும் திருமதி ரதி பரமசாமி அவர்கள் குறித்தும் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டிருக்கும் சுருக்கமான விபரங்கள் சிறப்புறத் தொகுக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

மலரின் இறுதிப்பக்கக் கட்டுரையை மலரின் முடிவுரைபோல 'உங்களுடன் மகிழ்ச்சியான உறவாடல்" என்ற தலைப்பில் தமிழர் தகவல் இணையாசிரியர் றஞ்சி திரு எழுதியிருக்கிறார். இம்மலரின் அடிநாதமாக நாம் காண வேண்டிய பல விடயங்களை அவரது கட்டுரை சிறப்புறத் தொகுத்துத் தந்திருக்கிறது.

தமிழர் வரலாற்று ஆவணமாகக் காணக்கூடிய கட்டுரைகள் பலவற்றையும் கொண்டிருக்கும் இம்மலரில், தன் தந்தைக்காக தமிழர் வரலாற்றின் கறுப்புத் தினமொன்றில் உயிர்பலியாகிக்கொண்ட செல்வன் எஸ்.தி. அகிலனை நினைவுகூர்ந்து எழுதப்பட்டிருக்கும் ஒருபக்கக் குறிப்பானது கனத்த உணர்வுடனும், அவரது பெற்றோரின் சமூகப் பங்களிப்பைக் குறித்து உள்ளார்ந்த நெகிழ்வுடனும் கவனிக்க வைக்கிறது என்றால் மிகையில்லை.

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தமிழர் தகவல் இதழ்களை தொடர்ந்து வடிவமைத்து வரும் கணினிக் கலைஞரும் ஓவியருமான சசிகரன் பத்மநாதனின் கைவண்ணமும் கலைவண்ணமும் ஆண்டு மலரை அழகுபடுத்தியுள்ளது. மலரின் அட்டையை விருதாளர்கள் எழுவரும் அலங்கரிக்கின்றனர்.

தமிழர் தகவலின் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளர் என்பதும் யாழ்ப்பாணத்தில் 1980களில் வெளிவந்த ஈழமுரசு, முரசொலி தினசரிகளின் ஸ்தாபக ஆசிரியர் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது.

மொத்தத்தில், தமிழரின் வரலாற்றைத் தொகுத்துத் தரும் தொடர் முயற்சியே தமிழர் தகவல் ஆண்டு மலர் என்பதை மீண்டுமொருமுறை இந்த ஆண்டு உறுதியாகச் சொல்லியிருக்கிறது இந்த 33வது ஆண்டு மலர். மொத்தத்தில் தமிழர் சமூகத்திலிருந்து எடுக்கப்பட்டு சமூகத்துக்கே தொகுத்துத் தரப்பட்டிருக்கும் தகவல் ஆவணம் இது.

ஆண்டு மலர் பிரதியை பெற விரும்புபவர்கள் **tamilsinfo@sympatico.ca** என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். ●

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமை...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பாராளுமன்றத்தில் பத்து உறுப்பினர்கள் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க பகிரங்கமாகக் அந்த வேளையில் கூறினார்.

தங்களது பதவிகளின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தனக்கு இரட்டைப் பிரஜாவுரிமை இருக்கிறது என்று ஒத்துக் கொண்டு பதவிவிலக முன்வரவில்லை.

தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கும் சகல உறுப்பினர்களும் 2020 ஆகஸட் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தெரிவானவர்களே. அந்த நேரத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை தடைசெய்த 19 வது திருத்தம் நடைமுறையில் இருந்தது. இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனபத்திரங்களை தாக்கல் செய்தபோது உண்மையை மறைத்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது.

அவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மாத்திரமல்ல, தங்களது கட்சிகளின் தலைவர்களுக்கும் உண்மையை மறைத்தார்கள் அல்லது அவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை தெரிந்திருந்த போதிலும் கூட தலைவர்களும் நியமனங்களை வழங்கினார்கள் என்றுதான் கூறவேண்டும்.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அடையாளம் காண்பதில் பாராளுமன்றம் உட்பட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் எதிர்நோக்கும் சிக்கல் ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கிறார்களா அல்லது நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்று 21 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதற்கு பிறகு ஊடகங்கள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் கேட்டபோது அதைக் கண்டறியும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு அல்ல தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உரியது என்று பதிலளித்தார். ஆனால், தேர்தல்களில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் நபரின் பிரஜாவுரிமை குறித்து விசாரிப்பது தங்களது பொறுப்பு அல்ல என்று அன்றைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவ கூறினார்.

போதிய சான்றுகள் இருந்தால் இந்த விவகாரத்தில் எவரும் நீதிமன்றத்தை நாடமுடியும் என்பது அவரது நிலைப்பாடு. அமெரிக்கப் பிரஜாவுரிமையைக் கைவிடாமல் கோட்டாபய ராஜபக்ச 2019 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்ததாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டபோது தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் அதே நிலைப்பாட்டையே எடுத்தார்.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது இரட்டைப் பிரஜாவுரிமையை இரகசியமாக வைத்திருப்பதாக சர்ச்சை கிளம்பியபோது அது குறித்து அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்தது. ஆனால் நாளடைவில் அது மறக்கப்பட்ட கதையாகிப் போனது. அத்தகைய ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தால் இரட்டைப் பிரஜாவுரிமையுடன் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் நிச்சயமாக பதவிவிலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இந்த விவகாரத்தில் முக்கியமான பொறுப்பு இருக்கிறது. ஆனால் அவர்களில் எவரும் தங்களுக்கு இருக்கவேண்டிய சட்டரீதியானதும் தார்மீக ரீதியானதுமான பொறுப்பை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. தங்களது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் எவராவது இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கிறார்களா என்று தலைவர்கள் கேட்டதாக ஒருபோதும் அறியவரவில்லை.

இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் "முடிந்தால் கண்டுபிடியுங்கள்" என்ற மனோநிலையில்தான் இருக்கிறார்கள் போன்று தெரிகிறது. ●

# "பயப்படுகிறீர்களா?"...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், 2019ஆம் ஆண்டு அனில் திருபாய் அம்பானி குழு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து தெரிவித்த அக்குழு, "ராகுல் காந்தி தொடர்ந்து தவறான தகவல், பிரசாரம் மற்றும் பொய்களை" பரப்பி வருவதா கக் கூறியது.

கடந்த 2019ஆம் ஆண்டில், ரஃபேல் ஒப்பந்தம் தொடர்பாக அம்பானி குழுமம் மற்றும் மோதி அரசின் மீது ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

ஏப்ரல் 2019 இல், பிரபல பிரெஞ்சு செய்தித்தாளான 'La Monde', 2015 பிப்ரவரி மற்றும் அக்டோபருக்கு இடைப்பட்ட காலத்தில், அனில் அம்பானிக்கு பிரெஞ்சு அரசு சுமார் 1100 கோடி ரூபாய் மதிப்பிலான வரிவிலக்கு அளித்ததாக செய்தி வெளியிட்டது.

இந்த அறிக்கை குறித்து அந்த செய்தித்தாளின் தெற்காசிய செய்தியாளர் ஜூலியன் போசு, "ஏப்ரல் 2015இல், பிரதமர் மோதி டசால்ட் நிறுவனத்திடம் 36 போர் விமானங்களை வாங்கும் திட்டத்தை அறிவித்தார். அப்போது, ரிலையன்ஸ் பிரான்சில் குறைந்தது 151 போர் விமானங்களை வைத்திருந்தது. ஆறு மாதங்களுக்குப் பிறகு. ரஃபேல் விமானங்களை வாங்குவதாக மோதி அறிவித்தார். பிரான்ஸ் வரித்துறை 151 மில்லியன் யூரோவுக்கு பதிலாக 7.3 மில்லியன் யூரோக்கள் செட்டில்மென்ட் செய்ய ஒப்புக்கொண்டது," என்று ட்வீட் செய்திருந்தார்.

அப்போது ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் பொய் என்று ரிலையன்ஸ் கூறியது. யுபிஏ அரசு ஆட்சியில் இருந்தபோது அந்நிறுவனம் பெற்ற ஒப்பந்தங்களைக் குறிப்பிட்டு, "உங்கள் அரசு 10 ஆண்டுகளாக நேர்மையற்ற அரசுக்கு உதவி செய்ததா?" என்ற கேள்வியையும் ராகுல் காந்தியிடம் அந்நிறுவனம் முன்வைத்தது.

கௌதம் அதானியும் , நரேந்திர மோதியும்

கௌதம் அதானியின் திடீர் அசாதாரண வளர்ச்சிக்கு நரேந்திர மோதியுடனான நெருக்கம்தான் காரணம் என்றும், அவர் மிகக் குறுகிய காலத்தில் உலகின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவராக உயர்ந்துவிட்டார் என்றும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அரசாங்கத்தில் தனக்கிருந்த தொடர்புகளைத் தனது தொழிலை மேம்படுத்த பயன்படுத்திக் கொண்டதாக கௌதம் அதானி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சட்டத்தில் உள்ள பலவீனங்களை சாதகமாகப் பயன்படுத்தி தொழிற்சாலைகளை அமைக்க குறைந்த விலையில் நிலங்களைக் கையகப்படுத்தியுள்ளார் என்று அவர் மீது விமர்சனம் உள்ளது.

ஆமதாபாத்தின் மூத்த பத்திரிகையாளர் திலீப் படேல் இதுகுறித்து பிபிசியிடம் பேசுகையில், "அதானி மிகவும் புத்திசாலி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவருக்கு அரசாங்கத்தின் உதவி தேவைப்படும் போதெல்லாம், நரேந்திர மோதி அவருக்கு நிறைய உதவியுள்ளார். சிமன் பாய் (குஜராத் முன்னாள் முதல்வர்) அவருக்கு கட்சி பகுதியில் நிலம் கொடுத்தார்."

"ஆனால், அதானிக்கு இவ்வளவு நிலங்களை, அதுவும் மலிவு விலையில் கொடுக்காமல் இருந்திருந்தால் அவரால் துறைமுகத்தையும், விமான நிலையத்தையும் கையகப்படுத்தியிருக்க முடியாது. அதிக வருமானம் ஈட்டி வந்த ஆமதாபாத் விமான நிலையமும் அவருக்கு வழங்கப்பட்டது," என்றார்.

கௌதம் அதானியின் நண்பர் கிரிஷ்பாய் டானி பிபிசியிடம் கூறுகையில், "எல்லோரும் மோதியை பற்றித்தான் பேசுகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரை மோதிஜி யாருக்கும் பரிவு காட்டுபவர் அல்ல. நான் அரசியலில் இல்லை. ஒருவேளை மோதிஜி அதானிக்கு உதவலாம்," என்றார்.

கடந்த சில ஆண்டுகளில் அம்பானி மற்றும் அதானியின் குடும்ப விழாக்களில்கூட வெளிப்படையாக நரேந்திர மோதி பங்கேற்றதில்லை. சொல்லப்போனால் அவர்களது பெயரைக்கூட அவர் உச்சரித்தது இல்லை. ஆனால், மே 8ஆம் தேதி இதற்கு முரணான சம்பவம்தான் நடந்துள்ளது. ●

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெரமுன...

சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை தெரிவிப்பார் என்று கூறியபோதும் அதுபற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

இதேநேரம், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வியூகம் வகுத்துள்ளார் என்று அறிய வருகிறது. இதற்கு மேற்குலக சக்திகளும் ஆதரவு அளித்து வருகின்றன. அப்படி, சஜித்தும் ரணிலும் இணைந்தால் பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளரை நிறுத்த அந்தக் கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறு வேட்பாளர் நிறுத்தப்பட்டால் பொதுஜன பெரமுனவின் தெரிவாக தம்மிக பெரேராவே உள்ளார் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, கடந்த மே தினத்தின் போது பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் தம்மிக பெரேரா முன்னிலைப் படுத்தப்பட்டார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

## நான்...

நியமிக்கப்பட்டால் இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிக்க எதிர்பார்த்துள்ளேன். இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து அமெரிக்காவின் கரிசனைகளை பகிர்ந்து கொள்வேன்.

"இலங்கையில் துடிப்பான சிவில் சமூகம் காணப்படுகின்றது. நான் நியமிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டால் இலங்கை - அமெரிக்க சமூகங்கள் உட்பட மக்கள் மத்தியிலான தொடர்புகளை வலுப்படுத்த எண்ணியுள்ளேன். இலங்கையில் பொறுப்புக்கூறல், உண்மை, நல்லிணக்கம், நீதி போன்றவற்றுக்கு ஆதரவளிப்பேன்.

"நான் தூதுவராக நியமிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டால் இலங்கை பின்பற்றவேண்டிய சர்வதேச தராதரத்துக்கு அனைவரையும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவேன்" - என்றார். (ஐ)

## சந்நிதியிலிருந்து...

தொடர்ந்து, வேல்கள், நந்திக்கொடிகள் ஏந்தியவாறு சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு சென்ற யாத்திரிகர்கள் அங்கு நடந்த பூசையில் பங்கேற்றனர். தொடர்ந்து, யாத்திரிகர்களுக்கு அன்னதானமும் சிறுதொகை பணமும் வழங்கப்பட்டதுடன், விசேட பஜனையும் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் யாத்திரிகர்களை வழியனுப்பி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இரு அணிகளாக பிரிந்து ஓர் அணி ஆவரங்கால், புத்தூர் ஊடக மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் வழியாகவும் மற்றோர் அணி பருத்தித்துறை, வல்லிபுரம், நாகர்கோவில் மருதங்கேணி ஊடாகவும் பாத யாத்திரையை தொடரவுள்ளன.

நேற்றைய தினம் ஆரம்பமான யாத்திரையில் 140 யாத்திரிகர்கள் பங்கேற்றனர். இவர்கள் செல்லும் வழியில் பல்வேறு இடங்களில் இருந்தும் யாத்திரிகர்கள் சேர்வார்கள். இவ்வாறு, வெவ்வேறு இடங்கில் இருந்து வரும் யாத்திரிகர்கள் அம்பாறை - உகந்தை முருகன் ஆலயத்தில் ஒன்றிணைந்து கதிர்காமத்தை சென்றடைவர்.

சந்நிதியிலிருந்து ஆரம்பமான இந்த யாத்திரைக் குழு 48 நாட்களில் - 98 ஆலயங்களை தரிசித்து - 815 கிலோ மீற்றர் தூரம் நடந்து கதிர்காமம் ஆலயத்தை சென்றடைவார். அங்கு அவர்கள், திருவிழா நிறைவடையும் வரை தங்கியிருந்து அதன் பின்னரே வீடு திரும்புவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது. வீடுகளுக்கு திரும்புவது வழமையாகும்.

இதேவேளை, கதிர்காமம் ஆலய பெருந்திருவிழா ஜூன் 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி - 21ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்த தோற்சத்துடன் நிறைவடையும். (ஐ-2)

## முள்ளிவாய்க்கால்...

இல்லாத அரிசியும் தண்ணீரும் மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சியே உணவின்றித் தவித்த மக்களின் பசியைப் போக்கி அவர்களின் உயிர்களை காத்தது. போர் முடிவின் பின்னர் தமிழின அழிப்பின் அடையாளமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது குறியீட்டு உணவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நல்லூரில் தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதேபோன்று, கிளிநொச்சியில் கந்தசாமி கோயில் முன்பாகவும் முல்லைத்தீவில் விசுவமடு, புதுக்குடியிருப்பிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வெவ்வேறு தரப்பினரால் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்திலும் மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரம் ஆலயம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கினர்.

## பிரசவித்த...

பிறந்தது.

நேற்று சனிக்கிழமை காலை சிறுமியும் அவரின் தாயாரும் குழந்தையை மருத்துவமனையிலேயே கைவிட்டு தலைமறைவாகி விட்டனர்.

சம்பவம் தொடர்பில் மருத்துவமனை நிர்வாகம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## ஐக்கிய...

சதித்திட்டத்துக்கும் மக்கள் ஏமாறப் போவதில்லை - இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

நேற்று சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நடத்தப்பட்ட அம்பாறை மாவட்ட விவசாயிகள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த ஆண்டு இறுதியில் பொது மக்கள் யுகம் உருவாகும். எம்மைப் பற்றி சிந்தித்து அனைவரும் அச்சமடைந்துள்ளனர். மொட்டு, யானை, திசைக்காட்டி என அனைவரும் எம்மைக் கண்டு அஞ்சுவதால் அவர்கள் அனைவரும் இணைந்து எமக்கெதிராக சதித்திட்டம் தீட்டுகின்றனர். எந்தவொரு சதித்திட்டத்தாலும் 220 இலட்சம் மக்களை ஏமாற்ற முடியாது.

அதிகாரம் எதுவுமின்றி பல சேவைகளை நாட்டுக்கு செய்யும் ஒரேயோர் எதிர்க்கட்சி ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே. இதேபோன்று தற்போது வழங்கும் சகல வாக்குறுதிகளையும் எமது ஆட்சியில் நிச்சயம் நிறைவேற்றுவேன் என உறுதியளிக்கின்றேன். புதிய நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயத்தை அடுத்த மட்டத்துக்கு எடுத்துச் செல்வோம்.

விவசாயிகளின் பயிர்செய்கைக்கான உறுதியான விலை நிர்ணயிக்கப்படும். அதேபோன்று விவசாயிகளுக்கான ஓய்வூதிய முறைமையையும் நாம் மறக்கவில்லை. இந்த ஆண்டு இறுதிக் குள் விவசாயிகளுக்கான ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்துவோம். யானை - மனித மோதலுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும். விவசாயிகளின் விவசாய நிலத்துக்கான உரிமம் வழங்கப்படும்.

சஜித் பிரேமதாஸ எந்தவொரு நாட்டுக்கும் அடிபணிய மாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதேபோன்று வர்த்தக நிறுவனங்களால் என்னை விலைக்கு வாங்கவும் முடியாது. எமது மக்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொண்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவோம் - என்றார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் - காஸா ஓர் ஒப்பீடு நிகழ்நிலை கருத்துப்பகிர்வு இன்று

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தமிழினப் படுகொலை - நிகழ்நிலைக் கருத்துப்பகிர்வு "முள்ளிவாய்க்கால் - காஸா ஓர் ஒப்பீடு!" எனும் தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நிகழ்நிலையில் ஹுழைஅ செயலியூடாக நடைபெறவுள்ளது.

மே 18 தமிழினப்படுகொலையை மக்கள் மயப்படுத்தும் முயற்சியின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுக்கும் இக் கருத்துப்பகிர்வில் ஊடகவியலாளர் அ. நிக்ஸன் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்.

"இன்று குழப்பமடைந்திருக்கும் உலக அரசியல் ஒழுங்கு இலங்கைத்தீவு போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு எத்தகைய சாதக - பாதகத் தன்மைகளை உருவாக்குகின்றன என்பது பற்றிய ஓர் அவதானிப்பும், அரசியல் விடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழர்கள் எவ்வாறான அணுகு முறைகளைக் கையாள வேண்டும்" என்பது பற்றிய உரையாடலாக இந்தக் கருத்துப்பகிர்வு அமையவுள்ளது.

குறிப்பாக இஸ்ரேல் - பலஸ்தீனம் பற்றிச் சர்வதேச நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டு வழக்கு விசாரணைகளும் ஈழத்தமிழர்களுக்குக் கற்றுத் தரும் பாடம் தொடர்பாக முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை மாதத்தில் தெரிந்து கொள்வதற்கான ஏற்பாடாக ஏற்று இவ் நிகழ்நிலைக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அனைவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைத்து நிற்கின்றது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஏ)

# குற்றச்செயல்களுக்கு உதவிய நபர் சிக்கினார்!

மோதரை, மே 12

பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற குற்றச்செயல்களுக்கு உதவிய சந்தேகத்தில் ஒருவரை 12 கிராம் 200 மில்லிகிராம் போதைப்பொருளுடன் மோதரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர் 26 வயதுடையவர் என்பதுடன் மோதரை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார். (ஏ)

## ரூ.2000....

22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 600 ரூபாயாக அதிகரித்துள்ளது.

22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை நேற்றுமுன்தினம் ஒரு இலட் சத்து 75 ஆயிரத்து 700 ரூபாயாக பதிவாகியிருந்தது.

இதேவேளை, நேற்று முன்தினம் ஒரு இலட்சத்து 91 ஆயிரம் ரூபாயாக இருந்த 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை நேற்று 2,000 ரூபாயால் அதிகரித்து ஒரு இலட்சத்து 93 ஆயிரம் ரூபாயாக பதிவானது. (ஏ)

## புத்தரின்...

மண்டபத்தில் நேற்று நடந்த இலங்கை பௌத்த சங்கத்தின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் முக்கிய பிரச்னையாக கால நிலை மாற்றப் பிரச்னை மாறும். புத்தரின் போதனைகளின்படி பார்த்தால் நாகரிகத் தின் பேராசையின் காரணமாகவே நாம் இந்த நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

அனைவரும் வேகமாக முன்னேற விரும்பினர். வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அதன்படி, மனித சமுதாயம் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு விளைவித்துள்ளது. எனவே, கால நிலை மாற்றத்தை எவ்வாறு கட்டுப்படுத் துவது என்பதில் நாம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

இப்போது இருப்பது செயற்கை நுண்ணறிவின் ஆரம்பமாகும். அடுத்த இரண்டு தசாப்தங்களில் செயற்கை நுண்ணறிவு எங்கே செல்லும் என்ற கேள்வியை நாம் எதிர்கொள்கிறோம். செயற்கை நுண்ணறிவுக்கும் புத்த மதத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதில் கவனம் செலுத்த வேண்டும். நம் மனதால் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதே புத்தரின் போதனைகள் சுட்டிக்காட்டுகிறது. மனதைக் கட்டுப் படுத்தினால் முன்னேறலாம். மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் நமக்கு எதிர் காலம் இல்லை.

மனதைக் கட்டுப்படுத்துவது மனிதனுக்கு மட்டுமே உள்ளது. அதனால்தான் புத்தரின் போதனைகள் மனித குலத்துக்காக செய்யப்பட்டது. மனதைக் கட்டுப் படுத்தினால் பேராசையை ஒழிக்க முடியும்.

இந்த மனித மனதுக்கு இணையாக செயற்கை நுண்ணறிவு தற்போது வந்து விட்டது. செயற்கை நுண்ணறிவுக்கு பல்வேறு தகவல்களை இணைக்க முடியும். செயற்கை நுண்ணறிவு அதற்கேற்ப செயல் டுகிறது. அப்படியானால், புத்தரின் போதனைகளுக்கும் செயற்கை நுண்ண றிவுக்கும் இடையிலான தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு வேறு மதத்தை போதிக்குமானால் அது பௌத்தத்துக்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, நாம் அது குறித்தும் கவனம் செலுத்த வேண் டும்.

வரலாற்று சிறப்புமிக்க அநுராதபுர காலத்தில் பௌத்தம் இலங்கைக்கு வந்ததுடன், அதன் பின்னர் பௌத்தம் பல்வேறு அழுத்தங்களைச் சந்தித்தது. இந்து மதம், மஹாயான தர்மம் மற்றும் அரசியல் சூழ்நிலைகள் அதில் தாக்கம் செலுத்தியுள்ளன. இக்காலத்தில் செயற்கை நுண்ணறிவும் அதில் இணைகிறது.

அப்படியானால் செயற்கை நுண்ணறிவு வேறு ஒரு தர்மத்தைப் போதிக்குமா என்று சிந்திக்க வேண்டும். மக்கள் தங்கள் கையில் இருக்கும் கைபேசியுடன் தர்மத்தை இணைத்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை சிந்திக்க வேண் டும். இது பௌத்த தம் மட்டுமன்றி ஏனைய மதத்தினரும் எதிர்கொள்ளும் பிரச்னையாக மாறி யுள்ளது.

எனவே, செயற்கை நுண்ணறிவை கட்டுப்படுத்தவும் புதிய சட்டவிதிகளை நாம் கொண்டு வருகிறோம். தொழில் நுட்ப மேம்பாட்டு சட்ட வரைவை தொழில் நுட்ப அமைச்சு தயாரித்துள்ளதுடன், அதன் கீழ் செயற்கை நுண்ணறிவு மையம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், புத்தரின் போதனைக்கும் செயற்கை நுண்ணறிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஆராய்ச்சியை தொடங்க அடுத்த ஆண்டு ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்க எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கம்பனிகளுடன் எந்தவித சமரசமும் இனி கிடையாது

## செந்தில் தொண்டமான் திட்டவட்டம்

கொழும்பு, மே 12

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பள அதிகரிப்பு குறித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. சம்பள அதிகரிப்பை வழங்க மறுப்பு தெரிவித்துவரும் நிலையில் கம்பனிகளுடன் எந்தவித சமரசமும் இனி கிடையாது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தோட்டத் தொழிலாளர்களுக்கு 1200 ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்ததையடுத்தே, அதனை மறுத்து செந்தில் தொண்டமான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்துப் பேச்சுக்கள் நடந்தபோது சம்பள உயர்வு வழங்க முடியாது என ஆரம்பத்தில் கம்பனிகள் தெரிவித்து வந்தன. கடும் அழுத்தத்துக்குப் பிறகு ஊக்குவிப்பு தொகை மாத்திரம் இனி வழங்கத் தயார் எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில் அரச வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதை யடுத்து, வேறு வழியின்றி தற்போது கம்பனிகள் 1200 ரூபாய் அடிப்படை சம்பளம் வழங்க முன்வந்துள்ளன.

ஒரு வருட காலமாக ஒரு ரூபாய் சம்பள உயர்வு கூட வழங்க முடியாது எனத் தெரிவித்த கம்பனிகள் தற்போது 200 ரூபாய் அதிகரிப்பு வழங்க முன்வந்தமைக்கான காரணம் அரசாங்கத்தால் வர்த்தமானி வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். எனவே கம்பனிகளுடன் எந்தவித சமரசமும் கிடையாது என செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை கம்பனிகள் நடைமுறைப்படுத்தாவிடின் கம்பனியின் முதன்மை இயக்குநர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

# யுக்திய சுற்றிவளைப்பில் ஒரு இலட்சம் பேர் கைது!

கொழும்பு, மே 12

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்பட்ட யுக்திய நடவடிக்கையின் ஆரம்பம் முதல் இதுவரை ஒரு இலட்சத்து 11074 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 4472 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளில் 41 கிலோ ஹெரோயின், 43 கிலோ ஐஸ் போதைப்பொருள், 03 இலட்சம் போதை மாத்திரைகள் மற்றும் 1500 மில்லியன் ரூபாய் சட்ட விரோத சொத்துக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# மதவாச்சியில் துப்பாக்கி சூடு

மதவாச்சி, மே 12

மதவாச்சி மஹாதிவுல்வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.


தனிப்பட்ட தகராறு காரணமாக வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பெண் மதிவாச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அடவீரகொல்லேவ பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடைய பெண்ணே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றதுடன், சந்தேகநபரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# இ. போ. ச. பஸ் கவிழ்ந்து விபத்து



கண்டி, மே 12

கண்டி, பதியபெலெல்ல வீதியில் மயிலப்பிட்டிய பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

இவ்விபத்தின் போது உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# மியன்மாரில் சிக்கித்தவித்த 15 மீனவர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 12

மியன்மார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு அந்த நாட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கை சேர்ந்த மீனவர்கள் 15 பேர் நேற்று கட்டு நாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த நிலையில் விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கட்டுனேரிய, மாரவில, உஸ்வட்டகெட்டியாவ மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 முதல் 50 வயதுக்குட் பட்ட 15 இலங்கை மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 7 பேர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி வென்னப்புவ கடலிலிருந்தும் மேலும் 8 பேர் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி சுற்பிட்டி மீன்பிடி துறைமுகத்திலிருந்தும் மீன்பிடிக் கப்பல்கள் மூலம் கடலுக்குச் சென்றனர்.

இந்நிலையில், இவர்கள் பயணித்த மீன்பிடிக் கப்பல்களானது இயந்திரக் கோளாறு காரணமாக செயலிழந்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் மியன்மார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் அந்த நாட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதனையடுத்து இவர்கள் 15 பேரும் கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதி வான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடு விக்கப்பட்டனர். (எ)

# மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பல்கலை. மாணவர்கள் ஐவர் கைது

மிரிஹான, மே 12

மோதலில் ஈடுபட்ட 5 பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்துள்ளதாக மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தகராறில் தாக்கப்பட்ட மாணவன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் .

இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்கள் மனித நேய பீடத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் களனி பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

# வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணத்தில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இருவர் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் தலைமறைவான நிலையில் அவரை கைது செய்வதற்கும் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரை மறித்த மூவர் குழு பெண்ணிடமிருந்து சங்கிலியை பறித்துச் சென்றது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வந்தன.

விசாரணைகளின் அடிப்படையில் வழிப்பறி குழுவைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வழிப்பறிக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் வாளும் கைப்பற்றப்பட்டன.

இந்தக் குழுவைச் சேர்ந்த மற்றொருவர் தலைமறைவான நிலையில் அவரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

# ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட கடற்படை கோப்ரலுக்கு மறியல்

அநுராதபுரம், மே 12

பெண்ணுடன் இணைந்து ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட கடற்படை கோப்ரலை விளக்கமறியலில் வைக்க அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரம் பிரதேச குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேக நபரான கடற்படை கோப்ரலை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்திய பொலிஸார், ஹெரோயின் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது சந்தேகநபர் தொடர்பான தகவல்கள் தெரியவந்ததாக பொலிஸார் கூறினர்.

சந்தேகத்துக்குரிய கடற்படை கோப்ரல் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர் எனவும் குறித்த பெண் வழங்கிய மோட்டார் சைக்கிளில் ஹெரோயின் விநியோகம் செய்து வந்தவர் எனவும் தெரியவந்ததாகவும் பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டனர். (எ)

**பசுக்கொலைக்கு எதிரான போராட்டம்**

இடம் : நல்லை ஆதீனம் முன்பாக
காலம் : 12.05.2024 காலை 8 மணி
தலைமை : முதறிஞர் மறவன்புலவு க.சச்சிதானந்தன்

இந்துக்களே விழித்தெழுங்கள்
இந்து அமைப்புக்களே!
போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்

இலங்கை சிவசேனை சிவத்தொண்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.